Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 மாசி 12 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 முஹறம் 03 (24.02.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:146

சகலவிதமான விளையாட்டு உபகரணங்களுக்கு
இன்றே விரையுங்கள்
ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
T.P.:- 021 - 222 7648
0777 - 166894

## யாழ். தேர்தல் மாவட்டத்தில் சுயேட்சைக் குழுவாக ஆனந்தசங்கரி போட்டி!

### இதுவரை 6 கட்சிகள் மனுத்தாக்கல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உட்பட நான்கு கட்சிகளும், ஆனந்த சங்கரி தலைமையிலான சுயேட்சைக்குழுவும் நேற்று யாழ்.செயலகத்தில் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தனர்.

ஈ.பி.டி.பி தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்யும் என எதிர்பார்க்கப்பட்டபோதும், இன்றைய தினமே ஈ.பி.டி.பி தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்யுமெனத் தெரியவருகிறது.

யாழ்.மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக ஜாதிக ஹெல உறுமய, றுகுணு மக்கள் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சுவராஜ்ய கட்சி, புதிய இடதுசாரி முன்னணி, ஐக்கிய சோசலிச முன்னணி மற்றும் ஒரு சுயேட்சைக் குழு என்பன தமது வேட்புமனுக்களைத் தாக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐந்து தேர்தல் மாவட்டங்களில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நேற்று வேட்புமனுத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வடக்கு - கிழக்கு பகுதிகளிலுள்ள ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் - பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களை நேற்றுத் தாக்கல் செய்தது.

தந்தை செல்வாவினால் ஆரம்பிக்கப்பட்ட தமிழரசுக் கட்சியின் பெயரிலும் - அதன் 'வடு' சின்னத்திலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் கையளித்தது.

கூட்டமைப்பின் யாழ்ப்பாண வேட்புமனுவை முதன்மை வேட்பாளர் மாவை சேனாதிராசா தாக்கல் செய்தார்.

இந்தப்பட்டியலில், கஜேந்திரகுமார், ந.ரவிராஜ், கே.சிவாஜிலிங்கம், என்.சிறிகாந்தா, சி.சிவமகாராசா, சி.வி.கே.சிவஞானம், பத்மினி சிதம்பரநாதன், சூ.சிறில், கே.சிவநேசன், செ. கஜேந்திரன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

வன்னி மாவட்டத்துக்கான வேட்பு மனுவை ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் வவுனியா மாவட்ட செயலகத்தில் கையளித்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தலில் பௌத்த பிக்குகள் போட்டி; தென்னிலங்கையில் பலத்த எதிர்ப்பு!

## மகாநாயக்கர்கள் கண்டனம்; பிக்குகள் ஆர்ப்பாட்டம்!

(கொழும்பு)

**எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஜாதிக ஹெல உறுமயவின் பட்டியலில் பௌத்த பிக்குகள் போட்டியிடுவதற்கு - தென்னிலங்கையில் பெரும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது.**

**பிக்குகள் தேர்தலில் போட்டியிடுவதை மல்வத்த, அஸ்கிரிய, சியாம் பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் கண்டித்திருப்பதுடன் - திலக் கருணாரட்ணவின் வீட்டிற்கு முன்பாக பௌத்த பிககுகளால் ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது.**

மல்வத்தை பீடாதிபதி வண.ரம்புக் வேல சிறி விபஸிதேரரும், அஸ்கிரிய பீடாதிபதி வண. உடுகம சிறி புத்திர இத்த நாயக்க தேரரும் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே பௌத்த பிக்குகள் தேர்தலில் போட்டியிடுவதற்கு கண்டனம் தெரிவித்துள்ளனர்.

பௌத்த பிக்குகள் தேர்தலில் போட்டியிடுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. இது புத்தசாசனத்துக்கு விரோதமானது என்றும், பௌத்த பீடாதிபதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

ஜாதிக ஹெல உறுமயவின் பட்டியில் 260 பௌத்த பிக்குகள் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இதற்கு எதிர்ப்புத்தெரிவித்து ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் திலக் கருணாரட்ணவின் வீட்டுக்கு முன்பாக மாற்றுக்கருத்துள்ள பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் திலக் கருணாரட்ணவின்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் மட்டும் ஈ.பி.டி.பி. வேட்பு மனு!

(திருகோணமலை)

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு நேற்றுவரை திருமலை அரச செயலகத்தில் ஏழு அரசியற்கட்சிகளும், நான்கு சுயேட்சைக் குழுக்களும் தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி, புதிய இடதுசாரி முன்னணி, சிங்கள பூமி புத்திர கட்சி, றுகுணு மக்கள் கட்சி, ஐக்கிய முஸ்லிம் மக்கள் முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உட்பட ஏழு அரசியற் கட்சிகளும், நான்கு சுயேட்சைக் குழுக்களும் அடங்குகின்றன. (10)

## கொழும்புத்துறைப் பகுதியில் ஷெல் வெடித்து

## சமாதானமும், சுதந்திர வாழ்வும் கிடைக்க

கொழும்புத்துறைப் பகுதியில்

## ஷெல் வெடித்து இளைஞன் பலி!

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை - நெடுங்குளம் பகுதியில் ஷெல் ஒன்றை எடுத்து வாளால் அறுக்க முற்பட்ட ஒருவர் அது வெடித்ததில் மரணமானார். மேலும் இரண்டு பேர் இந்தச் சம்பவத்தில் காயமடைந்தனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

வெற்றிவேலு சிவயோகநாதன் என்ற இளைஞர் கட்டுக்கோவில் பகுதியிலிருந்து ஷெல்லொன்றை எடுத்துவந்து வாளால் அறுக்க முயனறார். இதன்போது அந்த ஷெல் வெடித்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானமும், சுதந்திர வாழ்வும் கிடைக்க கூட்டமைப்பைப் பலப்படுத்த வேண்டும்!

## கூட்டமைப்பு முதன்மை வேட்பாளர் மாவை

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக தீர்வுக்கு அமைய தமிழ் மக்கள் விரும்புகின்ற சமாதானமும், சுதந்திரமான வாழ்வும் கிடைக்கவேண்டுமென்றால் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் கரங்களை அனைத்து மக்களும் மேலோங்கச் செய்ய வேண்டும்.

இவ்வாறு நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், நாங்கள் தென்னிலங்கையில் இடம்பெறுவதைப்போல ஆட்சி அதிகாரங்களை கைப்பற்றுவதற்கோ, இலங்கை முழுவதையும் ஆளவேண்டுமென்ற பேரினவாத நோக்குடனோ தேர்தலில் போட்டியிடவில்லை. நாம் இந்தத் தேர்தலில் தமிழ் தேசத்தின் விடுதலைக்காகவே போட்டியிடுகின்றோம்.

எமது தேர்தல் அடிப்படைக் கருத்து என்னவென்றால் சர்வதேச சமூகத்தினாலும், தமிழ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தனது அரசியல் நிலைப்பாட்டை தமிழ்மக்கள் ஆதரிப்பார்களாம்!

## ஆனந்தசங்கரி கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

தனது அரசியல் நிலைப்பாட்டை மக்கள் ஆதரிப்பார்கள் என்ற பூரணமான நம்பிக்கை தனக்கு உள்ளதாக சுயேட்சைக் குழுவாக தேர்தலில் போட்டியிட வேட்புமனுவினைத் தாக்கல் செய்த வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

நாம் சுயேட்சைக் குழுவாகப் போட்டியிடாதுவிட்டால் தமிழர் விடுதலைக் கூட்டணி அழிந்துபோயிருக்கும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த்தேசிய கூட்டமைப்பு

# துயிலுமில்லத்தில் அஞ்சலி செலுத்தியபின் யாழ். செயலகத்தில் வேட்புமனுத் தாக்கல்!

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நேற்று யாழ். செயலகத்தில் சமர்ப்பித்தது.

முன்னதாக, கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்துக்குச் சென்று காலை 10 மணியளவில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்திவிட்டு யாழ்.நகரிலுள்ள தந்தை செல்வா சதுக்கத்துக்கு சென்று தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் உருவச்சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தினர். பின்னர் குருநகரில் உள்ள ஜி.ஜி.பொன்னம்பலத்தின் உருவச்சிலைக்கு மலர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை.....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
ail :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...



வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு முன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் அஞ்சலி செலுத்தச் செல்லும் கூட்டமைப்பினரை முதற் படத்திலும் அஞ்சலி செலுத்தும் வேட்பாளர் சிவமகாராசாவை 2 ஆவது படத்திலும், அங்கு கலந்துகொண்ட ஆதரவாளர்களுடன் வேட்பாளர்கள் அமர்ந்திருப்பதை 3 ஆவது படத்திலும், தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மாவை சேனாதிராசா மாலை அணிவிப்பதை 4 ஆவது படத்திலும் யாழ்.செயலகத்தில் வேட்புமனுத்தாக்கல் செய்யச்செல்லும் மாவை தலைமையிலான வேட்பாளர்களை 5, 6 ஆவது படங்களிலும் ஆதரவாளர்கள் வரவேற்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

# யாழ்.பொது நூலகம் இன்று முதல் பாவனையில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொது நூலகம் இன்றுமுதல் மாணவர் பாவனைக்காக திறந்து விடப்படவுள்ளதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் இராமலிங்கம் தெரிவித்தார்.

எந்தவொரு ஆடம்பரமுமின்றி மாணவர்களின் நலனை மட்டும் கருத்திற்கொண்டு இன்றுமுதல் யாழ்.பொதுநூலகம் திறந்துவிடப்படுவதாகவும், இடநெருக்கடி நிலவச் சாத்தியமிருப்பதால் பொதுமக்கள் பாவனைக்காக சகல தேவைகளும் பூர்த்தி செய்யப்படடபின் வசதியான வகையில் யாழ்.பொதுநூலகம் சிறிய நாட்களின் பின்னர் திறந்துவிடப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மாணவர்கள் தமது உறுப்புரிமைப் பதிவுகளை மேற்கொள்வதற்கும், நூலகத்தின் உடனுதவும் பகுதியோடு தொடர்பைப் பேணும் வகையிலும் ஒரு சிறிய பகுதியே மாணவர் கற்பதற்காகவும், புத்தகப் பரிமாற்றத்திற்காகவும் ஒதுக்கப்பட்டு சேவைகள் இடம்பெறவிருக்கிறது.

இந்த நூலகத்திற்கான ஊழியர்களும் இன்னமும் நியமிக்கப்படவில்லை எனவும் தற்போது யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் நூலகங்களின் ஊழியர்களைக் கொண்டே யாழ்.பொதுநூலகம் இயங்கவுள்ளதெனவும் தொிவித்தார்.

இதேவேளை, நேற்றுமுதல் நூலக அங்கத்தவர் பதிவு ஆரம்பித்திருப்பதாகவும் விரும்பியவர்கள் தமது பெயர்களைப்பதிவு செய்துகொண்டு தமது உறுப்புரிமையைப் பெற்றுகொள்ளமுடியும் எனவும் தெரிவித்தார்.

நூலகம் தினமும் பிற்பகல் வேளைகளிலேயே திறந்திருக்குமெனவும் கூறப்பட்டது. (ப)

## தெல்லிப்பழை கோட்ட வலைப்பந்தாட்ட போட்டி

தெல்லிப்பழை கல்விக்கோட்ட வலைப்பந்தாட்டப்போட்டிகள் யாவும் நாளை பிற்பகல் 2.00 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற வுள்ளது. இந்தப் போட்டியில் பங்குகொள்ளும் அணிகள் -

15 வயது

யூனியன் கல்லூரி எதிர் மல்லாகம் மகா வித்தியாலயம்

மகாஜனக் கல்லூரி எதிர் அருணோதயக் கல்லூரி

17 வயது

யூனியன் கல்லூரி எதிர் வசாவிளான் மகா வித்தியாலயம்

அளவெட்டி அருணாசலம் எதிர் மகாஜனாக் கல்லூரி

19 வயது

வசாவிளான் மகா வித்தியாலயம் எதிர் மல்லாகம் மகா வித்தியாலயம்.

அருணோதயாக் கல்லூரி எதிர் இளவாலை மெய்கண்டான். (72)

# இல்ல மெய்வன்மை போட்டிகள்

யாழ்.இளையதம்பி இந்து வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கான சான்றிதழ்களும் வெற்றிக்கேடயங்களும் வழங்கும் வைபவம் அதிபர் மு.செல்லையா தலைமையில் பாடசாலையில் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறும். இதில் பிரதம அதிதியாக யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

❖ ❖ ❖

மருதங்கேணி கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டி அடுத்த மாதம் 2 ஆம் 3 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

உடுத்துறை மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன் தலைமையில் இந்தப் போட்டி நடைபெறவுள்ளது.(17)

❖ ❖ ❖

மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த மெயவல்லுநர் போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் ம.நவநீதமணி தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வடமராட்சி வலய உதவிப்பணிப்பாளர் ஆர்.இராசேந்திரமும், சிறப்புவிருந்தினராக மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதனும், வடமராட்சி கல்விக் கழகப் பொறுப்பாளர் சீ.தாயகன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (17)

❖ ❖ ❖

உடுத்துறை மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பி.ப 2 மணியளவில் வித்தியாலய அதிபர் ஏ.எஸ்.அரியகுமார் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக தென்மராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜ மூர்த்தி, சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன், வடமராட்சி கல்விக்கழகப் பொறுப்பாளர் சி.தாயகனும், கௌரவ விருந்தினராக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபரும் கலந்துகொள்ளவுள்ளனர். (17)

❖ ❖ ❖

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த சனிக்கிழமை நடைபெற்றபோது இல்லங்களுக்கிடையிலான அணிநடைப் போட்டியில் 500 மாணவர்கள் பங்குபற்றினர்.

யாழ்ப்பாண பாடசாலைகள் இல்ல மெய்வன்மைப் போட்டிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் மட்டுமே 5 இல்லங்கள் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த 5 இல்லங்களுக்களுக்கும் இடையில் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என 3 பிரிவுகளாக 15 அணிநடை குழுக்கள் இந்தப் போட்டியில் பங்குபற்றியிருந்தன.

மேற்படி இல்ல விளையாட்டுப் போட்டியில் 316 புள்ளிகளைப் பெற்று லின்ஞ் இல்லம் 5 ஆம் இடத்தையும், 319 புள்ளிகளைப்பெற்று பேசிவல் இல்லம் 4 ஆம் இடத்தையும், 331 புள்ளிகளைப் பெற்று றொமேன் இல்லம் 3 ஆம் இடத்தையும், 367 புள்ளிகளைப் பெற்று வில்ஸ் இல்லம் 2 ஆம் இடத்தையும், 398 புள்ளிகளைப் பெற்று புள்ளோ இல்லம் முதலாம் இடத்தையும் பெற்றன.(58)

# மார்ச் மாதம் 23 ஆம் திகதி முதல் வடக்கின் மாபெரும் கிரிக்கெட் போர்!

## இம்முறை மூன்று நாட்கள் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் முதன் முதலாக பாடசாலை மட்ட 3 நாட்கள் கிரிக்கெட்போட்டி ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாணத்தின் பெரும் கிரிக்கெட் போராகக் கருதப்படும் யாழ்.மத்திய கல்லூரி எதிர் சென்.ஜோன்ஸ் கல்லூரி கிரிக்கெட் போட்டித் தொடர் ஆரம்பிக்கப்பட்டு 100 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு இந்த வருடம்முதல் இந்தப் போட்டித் தொடரை 3 நாட்கள் போட்டியாக நடத்த இரு கல்லூரிகளும் தீர்மானித்து, அதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்த 3 நாட்கள் கிரிக்கெட் போட்டியை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 18 ஆம், 19 ஆம், 20 ஆம் திகதிகளில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் சமாதான சூழ்நிலை நிலவுகின்றமையாலும், யாழ்.மத்திய கல்லூரி எதிர் சென்.ஜோன்ஸ் கல்லூரி போட்டி தொடங்கி 100 வருட போட்டியாக உள்ளமையாலும் இந்த வருடப் போட்டிக்கு, பல்வேறு வெளிநாடுகளிலும் வாழும் இரு கல்லூரிகளினதும் பழைய மாணவர்கள் இங்கு வருகை தருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக அறியமுடிகிறது.

கடந்த வருடம் முதல் நடத்தப்பட்டுவரும் இரு அணிகளுக்குமிடையிலான 50 ஓவர்கள் கொண்ட ஒருநாள் போட்டி மார்ச் மாதம் 27 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது. (58)


ராஜா யாழ்ப்பாணம்.



விஜயகாந்த், வடிவேலு, பிரபுதேவா, பாண்டியராஜன் நடித்த

எங்கள் அண்ணா

10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே) (சி-2197)

நிறஞ்சனாஸ் சங்கானை

பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா

ஜெஜி

காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00, (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)

DUNGONS DRAEONS (சி-2196)

யசோ இறபர் ஸ்டாம்

75/=

பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே

யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2152)


# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 1973 - 04 - 23 |  | 1998 - 02 - 24 |

## மார்க்கண்டு பரமேஸ்வரன்
## கப்டன் அழகறிஞன்/சிறைவாசன்

தொண்டமனாறு

தமிழீழம் காக்க தரணியிலே - பிறந்தவனே இன்று
உன்னை இழந்து கலங்குகின்றோம் - நாம்
ஆண்டுகள் ஆறு ஓடி மறைந்தாலும் - உன்
ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திப்போம்.

உன்பிரிவை எண்ணி வாடும்
அம்மா, சகோதர சகோதரிகள்,
சிறிய தாய்மார், சித்தப்பாமார்,
பேத்திமார், பேரன்மார் மற்றும்
உற்றார், உறவினர், நண்பர்கள்.

மா.கமலேஸ்வரன்,
கற்குளம் ஒழுங்கை,
கொட்டடி,
யாழ்ப்பாணம் (639)

# தேர்தல் பிரசாரங்களுக்காக அவுஸ்ரேலிய ஊடகவியலாளர்

## ஜனாதிபதி சந்திரிகா அழைப்பு



(கொழும்பு)

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக அவுஸ்ரேலியாவிலிருந்து ஊடகவியலாளர் ஒருவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியின் தேர்தல் பிரசாரங்களைச் சூடுபிடிக்க வைக்கும் ஒரு கைங்கரியமாகவே இவருக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் ஏற்கனவே ஊடக தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட இவர் - ஊடக வெளியீடுகளிலும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சாதனைகளை வெளிப்படுத்துகின்ற சிறபபு விடியோ நறுக்குகளையும் மற்றும் தகவல் விவரணங்களையும் தயாரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மார்க் ஹில்சொப் என அறியப்படும் இவர், மக்கள் முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகமவுடன் இணைந்து, நடைபெறப்போகும் தேர்தலில் ஜனாதிபதியின் பிரசாரங்களை முன்னெடுக்கவுள்ளார்.

இந்நிலையில் ஜனாதியின் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி. சுயாதீனமாகவே தனது பிரசாரங்களை முன்னெடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலிகளின் இடைக்கால நிர்வாகசபையை நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை

## விமல் வீரவன்ச கூறுகின்றார்



தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபை யோசனைகளை, ஒருபோதும் தாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தின் தமிழ் அரசியல் கலந்துரையாடல் நிகழ்ச்சியின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர்களுடைய தாயகப் பிரதேசம் வடக்கு-கிழக்கு என்பதை ஒருபோதும் தாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று அந்த நிகழ்ச்சியின்போது குறிப்பிட்ட அவர் - இலங்கையின் பல பகுதிகளிலும், குறிப்பாக தென்பகுதியில் ஏராளமான தமிழ் மக்கள் வாழ்கின்றநிலையில், வடக்கு-கிழக்கை அவர்களுடைய தாயகப் பிரதேசம் என்று எவ்வாறு குறிப்பிடமுடியும் என்றும் கேள்வியெழுப்பினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வருமானால், சமாதான முயற்சிகளும், போர் நிறுத்த உடன்படிக்கையும் எவ்வாறு கடைப்பிடிக்கப்படும் என்று கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த விமல் வீரவன்ச-இந்தப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஸ்கண்டிநேவிய நாடுகள் அந்தப் பணிகளிலிருந்து நீக்கப்பட்டு, புதிதாக வேறு நாட்டவர் அந்தப் பணியில் ஈடுபடுத்தப்படுவர் என்றும் தெரிவித்தார்.

# முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக அம்பாறையில் ஹக்கீம் போட்டி!

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கிம் - எதிர்வரும் பொதுத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தகவலை நேற்று இரவு ரவூப் ஹக்கிம் தமிழோசைக்கு வழங்கிய பேட்டியின் மூலம் உறுதிப்படுத்தினார். அந்தப் பேட்டியில் ஹக்கிம் மேலும் தெரிவித்ததாவது -

கிழக்கில் மூன்று மாவட்டங்களிலும், யாழ்ப்பாணத்திலும் முஸ்லிம் காங்கிரஸ் மரச்சின்னத்தில் தனித்துப் போட்டியிடும் அதேவேளை, வடக்கு - கிழக்குத் தவிர்ந்த பிற இடங்களில் ஐக்கிய தேசிய முன்னணியோடு உடன்படிக்கை செய்து, அந்த உடன்படிக்கையின்படி முஸ்லிம் காங்கிரஸ் தேர்தலில் போட்டியிட முடிவுசெய்துள்ளது.

அத்துடன், கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு, முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான நான் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸின் தலைமை வேட்பாளராக போட்டியிடவுள்ளேன் எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் ஹக்கிம் போட்டியிடவுள்ளமை தொடர்பான செய்தி அங்கு பரவியவுடன், நேற்றுமுன்தினம் இரவு ஹக்கம் மீதான எதிர்பபினை முஸ்லிம் சமூகத்தவர் வெளிக்காட்டியதோடு, எதிர்வரும் இரண்டொரு தினங்களில் ஹர்த்தால் நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (07)

# பெரும்பாலான கட்சிகள் இன்று வேட்புமனுத் தாக்கல்

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில், போட்டியிடவிருக்கும் பெரும்பாலான அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக்குழுக்கள் இன்று தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யவுள்ளன.

இன்று நண்பகல் 12 மணியுடன் வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் முடிவடைவதால், பெரும்பான்மையான அரசியல் கட்சிகளும், சுயேட்சைக்குழுக்களும் இன்றையதினம் தமது வேட்பு மனுக்களைக் கையளிக்கவுள்ளனர்.

ஐக்கிய தேசிய கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகள் நேற்றும் இன்றும் வேட்பு மனுக்களைக் கையளிக்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் அமைச்சர் பௌசிக்கு போட்டியிடும் வாய்ப்பு மறுப்பு !

பொதுஜன ஐக்கிய முன்னீணியின் முன்னாள் அமைச்சரான ஏ.எச்.எம்.பௌசிக்கு, இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை அவருக்கு அல்லது அவரது மகனுக்கு மட்டுமே வழங்க முடியும் என்று தெரிவித்துள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சி, இருவரில் யார் போட்டியிடுவது என்று அவர்களே தீர்மானிக்கவேண்டும் என்றும் கோரியுள்ளது.

இந்நிலையில், இத்தகைய ஒரு பேரம்பேசலுக்கு தாம் ஒருபோதும் உடன்படப்போவதில்லை என்று தெரிவித்த பௌசி - தானோ, மகனோ இம்முறை தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்றும் தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய சூழ்நிலையில் தேர்தல் தேவையற்ற ஒன்று எனவும் அவர் தெரிவித்திருந்தமை குறிபபிடத்தக்கது.

## ஐ.தே.கவுடன் இணைந்து

# ஏழு மாவட்டங்களில் முஸ்லிம் காங்கிரஸ் போட்டி

எதிர்வரும் பொதுத்தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் -ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து 7 மாவட்டங்களில் போட்டியிடவுள்ளது. இதற்கான ஒப்பந்தம் ஒன்று நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் ஹசன் அலி, செனரத் கப்புக்கொடவ ஆகிய இருவருமே சிறி கொத்தாவில் ஒப்பந்தம் கைச்சாத் திட்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், முஸ்லிம் காங்கிரஸுக்குமிடையில சில தினங்களாக நடைபெற்று வந்த பேச்சுக்களில் உடன்பாடு எட்டப்பட்ட பின்னரே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக கட்சியின் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

அரசு -விடுதலைப் புலிகளுடன் இனப்பிரச்சினை குறித்து பேச்சு நடத்தும்போது, முஸ்லிம் காங்கிரஸ் தனித்தரப்பாகக் கலந்துகொள்ளுதல் போன்ற 10 கோரிக்கைகளுக்கு உடன்பாடு எட்டப்பட்டதையடுத்து முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து போட்டியிட இணக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்போது - அனுராதபுரம், வன்னி, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் இணைந்து போட்டியிடுவது என்றும், யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் தனித்து போட்டியிடவும், தேர்தலில் வெற்றிபெறும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் சுயாதீனமாகச் செயற்படுவதற்கும் ஐக்கிய தேசியக் கட்சி இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)





கடந்த வியாழக்கிழமை அம்பாறையில் நடைபெற்ற 'தமிழின உயிர்க் கொலை' நாள் நினைவுதினத்தன்று நடைபெற்ற பாடசாலை மாணவிகளின் பேரணிக் காட்சியையும், அம்பாறை மாவட்ட படையணித் தளபதி சச்சு மாஸ்டர் உரையாற்றுவதையும் காணலாம்.

# சிங்கள மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டுமாம்!

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்

வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்கள் போன்று, சிங்கள மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு மாநகரசபை வளாகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் விசேட மாநாட்டிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

### கூட்டமைப்பில் முஸ்லிம் வேட்பாளர்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முஸ்லிம் வேட்பாளராக ஜமாலியாவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியரான அப்துல் ஹசன் சாகுல் ஹமீத் போட்டியிடவுள்ளார்.

இவர் தற்போது தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் திருகோணமலை மாவட்ட பணிப்பாளராக இருப்பது குறிப்பிடத்தக்கது. (04)

அவர் மேலும் தெரிவிக்கையில்-மீண்டும் ஒரு யுத்தம் மூளாது என்ற நம்பிக்கையை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கான உறுதியை எமது அரசாங்கத்தால் வழங்க முடிந்தது.

ஜனநாயகம், மனுதத்துவம், நெறிமுறை ஆகியவற்றை முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு அரசாங்கம் செயற்பட்டபோதிலும், ஆறு வருட ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை, இரண்டு வருடங்களில் கலைப்பதற்கு குறிப்பிட்ட சிலரின் தேவைகளின் நிமிர்த்தம் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார்.

இதன் காரணமாக நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தி, பொருளாதாரமுறையை மேம்படுத்துவதுடன், வேலைவாய்ப்பை அதிகரிக்கச் செய்து, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான அரசாங்கம் ஒன்று உருவாக்கப்படவேண்டும்.

இதனை முன்னிட்டு அறுதிப் பெரும்பான்மை கொண்ட அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதற்கு மக்களின் ஆணை அவசியமாகும்.

2001 ஆம் ஆண்டு தேர்தல்களின்போது, ஐக்கிய தேசிய முன்னணி ஒரு மேலதிக நாடாளுமன்ற உறுப்பினரின் பலத்துடன் ஆட்சி அமைத்தது. எனினும், ஜனநாயக நெறிமுறைக்கு எதிராக ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்தார்.

எமது அரசாங்கத்தின் மீதான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கவில்லை. எனினும், இலங்கை மக்கள் எதிர்பார்த்த யுத்தநிறுத்தம், பொருளாதாரம் ஆகிய விடயங்களில் அரசாங்கம் பொறுப்பேற்றுச் செயற்பட்டது.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து, யுத்த நிறுத்த உடன்படிக்கையை நீண்டகாலச் சமாதானமாக மாற்றுவதே எமது அரசாங்கத்தின் குறிக்கோளாகும்.

இந்தச் சமாதான முயற்சிகளின் காரணமாகவே நாட்டில் சுதந்திரமான தேர்தல் ஒன்றை இப்போது நடத்தும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை, இந்திய அணிகள் சுப்ப லீக் போட்டிகளில் தோல்வி!

ICC U/19 CRICKET WORLD CUP BANGLADESH 2004

(டாக்கா)

பங்களாதேஷில் நடைபெற்றுவரும் 19 வயதுக்குட்பட்ட உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் முதலாவது சுப்ப லீக் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியிடம் இலங்கை 19 ஓட்டங்களால் தோல்விகண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி, முதலில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை துடுப்பெடுத்தாட அழைப்பு விடுத்தது.

50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து மேற்கிந்தியத் தீவுகள் அணி 200 ஓட்டங்களைப் பெற்றது. இந்த அணி வீரர் ரம்டின் மட்டும் அரைச் சதத்தைக் கடந்தார்.

இலங்கை அணி வீரர் கராஜ் பந்துவீச்சில் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

தொடர்ந்து ஆட்டத்தை ஆரம்பித்த இலங்கை அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடனேயே ஆட்டமிழந்தனர். கே.குலசேகர 67 ஓட்டங்களையும் கராஜ் 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஆனாலும் 49 ஓவர்கள் முடிவில் 181 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இலங்கை அணி அனைத்துவிக்கெட்டுக்களையும் இழந்து தோல்வி கண்டது.

மேற்கிந்தியத்தீவு வீரர் பாக்கர் 10 ஓவர்கள பந்து வீசி 39 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 6 விக்கெட்டுக்களை வீழ்த்தி தமது அணிக்கு வெற்றியைத் தேடிக்கொடுத்தார். இவர் ஆட்ட நாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது லீக் போட்டியில் தென்னாபிரிக்க அணி நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக விளையாடியதால் 50 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 225 ஓட்டங்களை அந்த அணி பெற்றது.

மோர்வ 54 ஓட்டங்களைப் பெற்றதுடன் பிலண்டர் 34, பொய்சென், போயர் ஆகியோர் தலா 33 ஓட்டங்களைப் பெற்றனர்.

226 என்ற வெற்றி இலக்குடன் ஆட்டத்தை ஆரம்பித்த இந்தியா, 47.1 ஓவர்களிலேயே - 223 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது.

உதப்பா - 25, தபான் - 66, சர்மா - 43 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பென்னாஸ் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக வேர்லொன் பிலெண்டர் தெரிவு செய்யப்பப்பட்டார்.

இதேவேளை முதல் சுற்று லீக் ஆட்டங்களில் தோல்வியுற்ற அணிகளுக்கு இடையில் நடந்த போட்டியில் அவுஸ்ரேலியாவும் நேபாளமும் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய வீரர் ஷேவாக்கிற்கு டெல்கியில் நிச்சயதார்த்தம்!

(டெல்கி)

இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி ஆட்டக்காரர் வீரேந்தர் ஷேவாக்கின் நிச்சயதார்த்தம் டெல்கியில் நேற்றுமுன்தினம் நடந்தது.

டெல்கியைச் சேர்ந்த 24 வயதான ஷேவாக், தனது அச்சமில்லா அதிரடி ஆட்டத்தின் மூலம் ரசிகர்கள் மத்தியில் குறுகிய காலத்தில் அதிக மதிப்பைப் பெற்று நட்சத்திர வீரராக மிளிர்ந்து வருகிறார்.



அவர் டெல்கியைச் சேர்ந்த கல்லூரி மாணவி ஆர்த்தி சிங்கை மணம்முடிக்க உள்ளார். டிப்ளோமா படித்துவரும் ஆர்த்தி சிங், நடுத்தர ஜாட் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

ஷேவாக் - ஆர்த்தி திருமண நிச்சயதார்த்தம் டெல்கியில் உள்ள சிட்டி பார்க் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நடந்தது.

ஷேவாக் - ஆர்த்தி திருமணம் ஏப்ரல் 22 ஆம் திகதி டெல்கியில் நடைபெறவுள்ளது. இந்திய அணியின் பாகிஸ்தான் சுற்றுப்பயணம் முடிந்து நான்கு நாட்கள் கழிந்து இந்தத் திருமணம் நடைபெறவிருக்கிறது.

## விளையாட்டு

# தமிழீழ தேசிய விளையாட்டு விழா; நான்காம் நாள் போட்டி முடிவுகள்!

தமிழீழ தேசிய விளையாட்டு விழாவின் நான்காம் நாள் நிகழ்வுகள் நேற்று கிளிநொச்சி பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

தமிழீழ தேசியக் கொடியினை மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ராணிமைந்தன் ஏற்றி வைத்தார். யாழ்.மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்றுநர் சண்முகலிங்கம், நிதர்சனம், நிறுவனத்தைச் சேர்ந்த கவிதா, யூடி சித்தாராணி, துடுப்பாட்ட நடுவர் சிறிதரன், யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட அணித்தலைவி தர்சினி, மன்னார் மாவட்ட கரப்பந்தாட்ட அணித்தலைவி ரஞ்சனா, மட்டு. உடற்பயிற்சி ஆசிரியர் பிரான்சிஸ் ஆகியோர் மாவீரரின் திருவுருவப் படங்களுக்கு ஈகச்சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தினர். அதன்பின்னர் போட்டிகள் ஆரம்பமாகின.

முதலாவதாக, யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்றன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிளிநொச்சி அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தனர். 29.1 ஓவர்களில் அந்த அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 107 ஓட்டங்களைப் பெற்றது. இவ்வணி சார்பாக ராஜ்குமார் 21 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றார்.

பந்துவீச்சில் றொபின்சன் 3, யதார்த்தன், கிருஷ்ணராஜா இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். அணி 22.1 ஓவரில் மூன்று விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை எட்டியது. இதன்மூலம் இந்த அணி அரையிறுதிப் போட்டிக்கு தெரிவானது.

அணித்தலைவர் கௌரிபாகன் ஆட்டமிழக்காது 46, சிவராசா 25 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் ராஜகுமார் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இப்போட்டியின் நடுவர்களாக கிருபாகரன், முருகவேல் ஆகியோரும் மூன்றாவது நடுவராக செல்வராகாவும் கடமையாற்றினர்.

கபடி ஆண்களுக்கான போட்டியில் வவுனியா அணி 48:15 புள்ளி அடிப்படையில் முல்லை அணியை வென்று அரையிறுதிக்கு தெரிவானது.

கபடி பெண்களுக்கான போட்டியில் மட்டக்களப்பு அணி 21:12 என்ற புள்ளி அடிப்படையில் திருமலை அணியைவ் வென்றது. இப்போட்டிகளின் நடுவர்களாக ஜஸ்ரின், விமலேசன, லலித் பியசேகரா, முகுந்தன் ஆகியோர் கடமையாற்றினர்.

கரப்பந்தாட்டம் பெண்களுக்கான போட்டியில் திருமலை 25:23, 25:17, 26:24 என்ற புள்ளி அடிப்படையில் யாழ் அணியை வென்றது. மன்னார் அணி 25:18, 25:21, 25:15 என்ற புள்ளி அடிப்படையில் அம்பாறை அணியை வெனறது.

இந்துப் போட்டிகளின் நடுவர்களாக இ.மனோகரன், தி.செல்வராசா, க.குமார், எஸ்.சசீதராஜ், ந.செல்வராசா, தே.தேவானந்தன், எம்.ஜெயசலன் ஆகியோர் கடமையாற்றினர்.

தாச்சி ஆண்களுக்கான போட்டியில் அம்பாறை அணி சமுகமளிக்காததால் திருமலை அணி வென்றதாக அறிவிக்கப்பட்டது.

தாச்சி பெண்களுக்கான போட்டியில் யாழ் அணி ஏழு புள்ளிகள் பெற்று அம்பாறை அணியை வெற்றியீட்டியது. இப்போட்டிகளின் நடுவர்களாக கா.ஜெயசீலன், சி.த.கணேசலிங்கம் ஆகியோர் கடமையாற்றினர்.

# சிம்பாப்வே 183 ஓட்டங்களால் பங்களாதேஷை தோற்கடித்தது!

(ஹராரே)

பங்களாதேஷ் - சிம்பாப்வே அணிகளுக்கிடையில் ஹராரேயில் நடைபெற்ற முதலாவது ரெஸ்ட் போட்டியின் நான்காம் நாளான நேற்று சிம்பாப்வே 183 ஓட்டங்களால் பங்களாதேஷை தோற்கடித்தது. கடந்த 2001 ஆம் ஆண்டு நவமபருக்கு பின்னர் சிம்பாப்வே பெறும் முதல் வெற்றி இதுவாகும். அத்துடன் சிம்பாப்வேயின் பந்து வீச்சாளர் பிளிங்னட் ஹட்ரிக் சாதனையையும் நிகழ்த்தியுள்ளார்.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற சிம்பாப்வே முதல் இனிங்ஸை ஆடத்தொடங்கியது. இந்த அணி தனது முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 441 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இப்ராஹிம் 65, காலைஷ் 58, ரைபூ 59, எர்வின் 86, ஹீத்ஸ்ரிக் 68, ஈவிங் 71 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் ராபாஸ் பஸ்சியா, முஷிபுர் ரஹ்மான் இருவரும் தலா மூன்று விக்கெட்டுக்களையும் மொஹமட் ரபிகியூ 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதலாவது இனிங்ஸைத் தொடங்கிய பங்களாதேஷ் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 331 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அஹாறியர் கொசைன் 48, ராஜின் சலி 49, மொஹமட் அஷ்ரபுல் 98, முஷிபூர் ரஹ்மான் 44, மஞ்சுரல் இஸ்லாம் ரானா ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களை கூடுதலாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஹீத்ஸ்ரிக் 4, பிளிங்நட் 2, ஹொண்டோ 3, பிறைஸ் 1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இரண்டாவது இனிங்ஸை தொடர்ந்த சிம்பாப்வே எட்டு விக்கெட்டுக்களை இழந்து 242 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. இதில் இப்ராஹிம் 31, காலைஷ் 33, ரைபூ 58, எர்வின் 74, பிளிங்நட் 32 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் ராபாஸ் பஸ்சியா, மொகமட் ரபிகியூ, மஞ்சுரல் இஸ்லாம் ரானா மூவரும் 2 விக்கெட்டுக்களையும், மஞ்சுரல் இஸ்லாம் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

352 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் தனது இரண்டாவது இனிங்ஸை ஆடத்



தொடங்கிய பங்களாதேஷ் 169 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியைத் தழுவியது.

இந்த அணிசார்பாக ராஜின் சலி 47, காலித் மகூத் 61, இஸ்லாம் ரானா 31 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் பிளிங்நட் ஹட்ரிக் சாதனையாக 3, ஹொண்டோ 2, பிறைஸ் 4 விக்கெட்டுக்களையும் ஈவிங் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# இந்திய தேர்தல் களத்தில் நடிகர், நடிகைகளும் குதிப்பு

தேர்தலின்போது அரசியல் கட்சிகளுக்கு பிரசாரம் செய்யும் பணியில் முன்பு நடிகர் - நடிகைகள் பயன்படுத்தப்பட்டு வந்தனர். பிரசாரத்தில் ஈடுபட்டுவந்த நடிகர் - நடிகைகள் தற்போது வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டு வருகின்றனர்

நடிகர் சத்ருகன் சின்கா கடந்த தேர்தலில் பீகார் மாநிலத்தில் பா.ஜ.க. வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று மத்திய அமைச்சரவையில் இடம்பெற்றார். இந்தத் தேர்தலிலும் அவர் போட்டியிடுகிறார்.

நடிகர் வினோத் கன்னா குருதாஸ்பூர் தொகுதியிலிருந்து இரண்டு தடவைகள் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தத் தேர்தலிலும் அவர் அதே தொகுதியில் பா.ஜ. க. சார்பில் போட்டியிடுகிறார்.

இந்தி நடிகை ஷபானா ஆஸ்மி நியமன எம்.பி.யாக இருந்தார். தற்போது அவர் தேர்தல் களத்தில் குதிக்கிறார். மும்பை தொகுதியில் காங்கிரஸ் சார்பில் அவர் நிறுத்தப்படுகிறார்.

சமீபத்தில் பா.ஜ.கவில் சேர்ந்த நடிகை ஹேமமாலினி லூதியானா தொகுதியில் போட்டியிட உள்ளார். இந்தத் தொகுதி அவரது கணவர் தர்மேந்திராவின் சொந்தத் தொகுதி ஆகும்.

# லக்னோ தொகுதியில் மீள போட்டியிடவுள்ளேன்; பா.ஜ.க. ஊழியர் கூட்டத்தில் வாஜ்பாய் தெரிவிப்பு!



லக்னோ தொகுதியில் பிரதமர் வாஜ்பாய் மீண்டும் போட்டியிடுகிறார். பிரதமர் வாஜ்பாய் ஏற்கனவே உத்தரப் பிரதேச மாநிலம் லக்னோ தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்.

அவர் மீண்டும் 2 ஆவது முறையாக அதே தொகுதியில் போட்டியிடுகிறார்.

நேற்றுமுன்தினம் லக்னோவில் நடந்த பாரதீய ஜனதா ஊழியர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு வாஜ்பாய் பேசுகையில், இந்தத் தகவலை வெளியிட்டார்.

கூட்டத்தில் வாஜ்பாய் பேசியதாவது :-

பல்வேறு மாநில பாரதீய ஜனதா அமைப்புக்களில் இருந்து - நான் அங்கு போட்டியிட வேண்டும் என்று அழைப்பு வந்துள்ளது. அந்த அழைப்புகளை நான் ஏற்கவில்லை.

நான் லக்னோ தொகுதியில் போட்டியிட்டு எம்.பி. ஆன பின்புதான் பிரதமர் ஆனேன். எனவே நான் மீண்டும் லக்னோ தொகுதியில் போட்டியிட முடிவு செய்திருக்கிறேன்.

லக்னோ தொகுதி மக்கள் என் மீது மிகுந்த பாசமும் நம்பிக்கையும் வைத்துள்ளனர். அவர்களை ஏமாற்ற விரும்பவில்லை.

லக்னோ தொகுதியின் இனிமையான நினைவுகளை மறக்க மாட்டேன். என் அரசியல் வாழ்க்கையில் புதிய திருப்புமுனையாக அமைந்ததே, இந்த தொகுதியில் நான் பெற்ற வெற்றிதான்.

உத்தரப் பிரதேசத்தில் உள்ள 80 நாடாளுமன்ற தொகுதிகளில் மிக அதிகமான அளவில் தொகுதிகளை நாம் கைப்பற்றவேண்டும். உத்தரப் பிரதேசத்தில் பெறும் வெற்றி, மத்தியில் ஆட்சி அமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கும்.

எனவே பாரதீய ஜனதா தொண்டர்கள் தீவிரமாக உழைத்து வெற்றிபெற வேண்டும்.

இவ்வாறு வாஜ்பாய் பேசினார்.

வாஜ்பாயை உத்தரப்பிரதேசத்தில் உள்ள ஷியா, சனி முஸ்லிம் தலைவர்கள் சந்தித்துப் பேசினார்கள். ஆவாத் அரச குடும்பத்தினரும் வாஜ்பாயைச் சந்தித்தனர்.

# விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் நேற்றுமுன்தினம் தாயகம் திரும்பினர்

(வடமராட்சி)

வடமராட்சிக்கடற் பகுதியில் அண்மையில் உள்ளூர் மீனவர்களால் பிடிக்கப்பட்ட 22 மீனவர்களும் நேற்றுமுன்தினம் தமிழ் நாட்டைச் சென்றடைந்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

கடந்த சனியன்று இவர்கள் விடுவிக்கப்பட்ட நிலையில், அன்றைய தினமே தமிழ்நாட்டிற்கு செல்வதாக இருந்த போதிலும் கடுமையான கடற் கொந்தளிப்புக் காரணமாக இவர்கள் செல்லவில்லை. இதனால் இவர்களது பயணம் நேற்றுமுன்தினமே நடைபெற்றது.

வடமராட்சியின் இன்பருட்டி மற்றும் அதனையண்டிய கடற்பகுதியில் உள்ளூர் மீனவர்களால் பிடிக்கப்பட்ட இவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதும்,

பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய போது இவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு பருத்தித்துறை நீதிவான் உத்தரவிட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.



காடியவளை இந்து இளைஞர் மன்ற பொன்விழா மற்றும் மலர் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட - கலாநிதி க.குணராஜாவிற்கு மலர்மாலை அணிவதைப் படத்தில் காணலாம். (17)

# யாழ்.நகரின் அபிவிருத்திக்கென இவ்வாண்டு அதிகநிதி ஒதுக்கப்படும்

## யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதி அபிவிருத்திக்கு இந்த ஆண்டு அதிகளவு நிதி செலவுசெய்யப்படும் என யாழ். மாவட்ட அரச அதிபர் செ. பத்மநாதன் தெரிவித்தார்.

யாழ்.மத்திய கல்லூரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

ஒரு காலத்தில் சின்னச் சிங்கப்பூர் என்றழைக்கப்பட்ட யாழ். நகரப்பகுதி யுத்த அனர்த்தத்தால் சிதைவடைந்து சின்னாபின்னமாகிப் போயுள்ளது. அதன் பழைய அடையாளத்தை மீளவும் கட்டியெழுப்புவதற்கான முயற்சியை இவ்வாண்டு முதல் ஆரம்பிக்கவுள்ளோம்.

யாழ்.நகரப்பகுதியில் உள்ள சுப்பிரமணியம்பூங்கா, நீதிமன்றக் கட்டடம், பொலிஸ்விடுதி உட்பட சகல கட்டடங்களையும் மீளக்கட்டுவதற்கு முயற்சி எடுக்கிறோம்.

எமது மாவட்டப்பாடசாலைகள் முழுமையான வசதிகளைக் கொண்டிருக்காமை பெருங்குறையாக இருக்கின்ற போதிலும், எமது மாணவர்கள் அக்குறையையும் பொருட்படுத்தாது தமது சாதனைகளைப் படைத்துவருவது மன மகிழ்வைத் தருகிறது.

மாணவர்களின் வசதியை மேம்படுத்துவதற்கான சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(58)

# சிறிலங்கா சுதந்திரக்கட்சி யாழ்ப்பாணத்தில் போட்டியிடாது!

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி யாழ்.மாவட்டத்தில் போட்டியிட மாட்டாதென அந்தக் கட்சி வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி யாழ்ப்பாணத்தில் போட்டியிடுவது குறித்து கட்சியின் ஆதரவாளர்களுடன் அண்மையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்பின்னர் - சுதந்திரக்கட்சி யாழ்.மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு அனுமதிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரியிருந்தது.

ஐக்கிய சுதந்திர முன்னணியுடன் கூட்டமைத்துள்ளதால் சுதந்திரக் கட்சி யாழ்ப்பாணத்தில் போட்டியிடுவதை நிறுத்தியுள்ளதாகவும்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைக்குமாயின் தேசிய பட்டியலில் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வேல்முருகு தங்கரா ஜாவுக்கு தேசியப்பட்டியலில் நியமனம் வழங்குவதாக சுதந்திரக் கட்சியின் தலைமைப்பீடம் தெரிவித்துள்ளதாக அந்தக் கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்தன. (111)

## யோகாசன கண்காட்சி

(வடமராட்சி)

பருத்தித்துறை யோகசாந்தி நிலையத்தின் யோகாசன கண்காட்சி - இன்று பி.ப. 2.30 மணிக்கு தென்புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தில் - இந்தக் கல்லூரி அதிபர் சகுந்தலா தேவி தலைமையில் நடைபெறவுள்ளது. (17)

# கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் வலிப்பு நோயால் மரணம்!

கடற்தொழில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் திடீரென வலிப்பு ஏற்பட்டதால் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுனதினம் காக்கைதீவு கடற்பரப்பில் இடம்பெற்றுள்ளது. கடற்தொழில் ஈடுபட்டுக் கொண்டிருந்த காக்கைதீவுப் பகுதியைச் சேர்ந்த க.ராசா (வயது-48) என்பவரே மரணமடைந்தார்.

இவரது உடல் தொழில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஏனைய கடற்தொழிலாளர்களால் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. வைத்திய பரிசோதனைக்காக இவரது உடல் யாழ்.போதனா வைத் தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (தீ)

# திரைக்கலை தொடர்பான பயிற்சி வகுப்புக்கள்

திரைப்படம் ஒன்றுக்குத் திரைக்கதை எழுதுதல், ஒளிப்பதிவு, இயக்கம் ஆகியன தொடர்பான தொழில்நுட்பப் பயிற்சி வகுப்புக்கள் முறையே - மார்ச் மாதம் 2 ஆம், 3 ஆம், 4 ஆம் திகதிகளில் தினமும் காலை 10 மணிக்குக் கொடிகாமம் வீதி, கரவெட்டி எனும் விலாசத்தில் அமைந்துள்ள மாவட்டத்திரைக் கலைச் சங்கங்களின் சம்மேளனமான 'சனல சித்திரம்' அமைப்பின் யாழ்.மாவட்டக் கிளைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

சனசமுக நிலையங்களிற்கூடாக இளைஞர், யுவதிகளுக்கு நிரந்தர சுயதொழல் வாய்ப்பினை உருவாக்கித்தரும் வகையில் 'சனல சித்திர' அமைப்பினால் நடாத்தப்படும் திரைக் கலைசார் இலவச பயிற்சிநெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான இந்த திரைப்படத் தொழில்நுட்பப் பயிற்சி வகுப்புக்களில் கலந்துகொள்ள விரும்பும் ஏனையோர், தத்தமது சனசமூக நிலையத் தலைவர் அல்லது செயலாளரின் சிபார்சுடன் இந்த விலாசத்துக்கு உடனடியாகத் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.



கிளிநொச்சி - இயக்கச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழாவில் கலந்துகொண்ட கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் - ப.அரியரத்தினம் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : வி.யதுஷன்
முகவரி : 17/5 முருகன் வீதி, திருநெல்வேலி கிழக்கு.

ஐந்தாவது அகவையில்



பெயர் : ம.மதுஷா
முகவரி : நாகலிங்க முதலியார் ஒழுங்கை, பருத்தித்துறை.

# மீள்நியமனம் பெற்ற கிராம அலுவலர் இருவர் பணியிலிருந்து இடைநிறுத்தம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச செயலகம் பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் பெற்று, பணியாற்றிய இரு கிராம அலுவலர்களது பணிகள் இந்த மாதம் நடுப்பகுதி முதல் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

நெடுந்தீவு மத்தி கிழக்கில் பணியாற்றிய த.பசுபதி, நெடுந்தீவு தெற்கில் பணியாற்றிய கா.கோபாலபிள்ளை ஆகியோரே பணி நிறுத்தப்பட்டவர்களாவர்.

இவர்களது வெற்றிடத்திற்கு புதியவர்கள் நியமிக்கப்படாமல் தற்போது பணியில் உள்ள ந.நடராஜா நெடுந்தீவு மத்தி கிழக்கிற்கும், கோ. சண்முகலிங்கம் நெடுந்தீவு தெற்கிற்கும் பதிற் கடமை அலுவலர்களாக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரால் நியமிக்கப்பட்டுள்ளனர். (113)

# விஞ்ஞானபீடத்தில் இவ்வருடம் புதிய கற்கை நெறிகள் ஆரம்பம்

இந்த வருடத்திலிருந்து யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் புதிய கற்கைநெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பல்கலைக்கழக மாணவர்கள் தனியே கல்வியில் மட்டுமே அறிவுடையவர்களாகவும்- பொதுவிடயங்கள், கலைகலாசாரங்களில் போதிய அறிவற்றவர்களாகவும் இருப்பதனாலே, இந்தப் புதிய கல்வித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கல்வியில் - ஆங்கில மொழி, இலங்கை தொடர்பான கல்விகள், சமூகவியல் தொடர்பான கற்கைகள், பொது அறிவு, ஒழுங்காற்றுகை தொடர்பான கல்வியறிவுகளே போதிக்கப்படவுள்ளன.

அத்துடன் - உயிரியல், விஞ்ஞானத்துறை மாணவருக்கு கணிதவியல் கற்கைகளும், பௌதீக விஞ்ஞானத்துறை மாணவர்களுக்கு உயிரியல் தொடர்பான கற்கைகளும் போதிக்கப்படவுள்ளன.

மேலும், முகாமைத்துவம், தொடர்பாடல் தொடர்பான விடயங்களும் இந்தக் கற்கைநெறியில் அடக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் புதிய கற்கை நெறியை அமுல்படுத்துவதன் மூலமாக, எதிர்காலத்திலே பல்துறை அறிவு சார்ந்த விஞ்ஞானப் பட்டதாரிகளை உருவாக்கமுடியுமென நம்பப்படுகிறது. (94)

## காப்புறுதி ஆவணங்கள் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

காப்புறுதி ஆவணங்கள் அடங்கிய கோவையொன்று கண்டெடுக்கப்பட்டு, நமது ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.




# பார்த்துக்கொண்டு சத்திரசிகிச்சை

நோயாளி ஒருவர் வைத்தியசாலையில் படுக்கையில் இருந்தவாறு, தனது சத்திரசிகிச்சையின் முடிவுகளை அறிவதற்காக வைத்தியரை எதிர்பார்த்துக் காத்திருக்கும்நிலை எதிர்காலத்தில் நீக்கப்படவுள்ளது. ஆனால், மனித இயந்திரமனிதன் (ROBOT) வைத்தியரின் பணிகளை மேற்கொள்ளவுள்ளது. இவ்வகையான இயந்திரமனிதன்மூலம் நோயாளிக்கும், மருத்துவருக்குமிடையே தொடர்புகளை மேற்கொள்ளலாம். மருத்துவர் தனது வீட்டில் இருந்தவாறே அல்லது வேறொரு நாட்டில் இருந்தோ தொடர்புகளை மேற்கொள்ளலாம்.



பிரித்தானியாவில் பால்ரிமோரில் அமைந்துள்ள ஜோன் கொப்கின்ஷ் வைத்தியசாலையில் பணிபுரியும் டொக்டர் லொயூஷ் கவோயுசி மருத்துவ பணிகளுக்காக இயந்திர மனிதனை உபயோகிக்கும் துறையின் முன்னோடியாக திகழ்கின்றார்.

சிறந்த மருத்துவர்கள் - மருத்துவப் பரிசோதனைகள், சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளும்போது, சில தவறுகள் ஏற்படவும் நேரிடுகின்றது. இவ்வகையான இயந்திர மருத்துவர்கள்மூலம் 30 சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நோயாளி தொடர்பான தகவல்களை ரோபோக்களுக்கு அனுப்புவதன்மூலம், எவ்வகையான சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதைத் தீர்மானித்துக் கொள்கின்றது.

வைத்தியசாலையில் நோயாளிகளின் படுக்கைகளுக்கு நகர்ந்துசென்று, ஒவ்வொருநாளும் அவரின் நோயில் ஏற்படும் மாற்றங்களைத் தகவல்களாகச் சேகரித்துக்கொள்கின்றன. இதன்மூலம் மருத்துவர்களின் வேலைப்பளுவைக் குறைத்து கொள்கின்றது.

# ரோபோ



விலங்குகளின் பரிணாம வளர்ச்சியின் இறுதி நிலையாக நிமிர்ந்த மனிதன் (ஹோமோ செப்பியன்) கணிக்கப்படுகின்றான். நிற்பது, நடப்பது, ஓடுவது, பாய்வது ஆகியனவற்றிற்குச் சமநிலையைப் பேணுதல் அவசியமாகும். ஜப்பானில் தயாரிக்கப்பட்ட "சுசிமோ" எனப்படும் இயந்திர மனிதன் உலகநாடுகளிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. இது மனிதனைப்போல் நடந்துசெல்லும் ஆற்றலைக் கொண்டுள்ளது. இதன் ஆற்றலை வெளிப்படுத்துவதற்கு இதை உருவாக்கிய 'ஹொன்டா' கம்பனியைச் சேர்ந்தவர்கள் பிரித்தானியாவில் மேடைக்காட்சி ஒன்றினை ஒழுங்கு செய்திருந்தனர். பத்திரிகையாளர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

படிக்கட்டுக்களின் மீதும் நடந்து, கைகளை அசைத்தும், ஒற்றைக்காலில் நின்றும் பக்கவாட்டில் உடல் பாகங்களை அசைக்கும் தனது வலிமையைக் காண்பித்தது. மனிதனின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து செயலாற்றியது. இது பார்வையாளர்களிடம் ஆச்சரியத்தையும், சந்தோஷத்தையும் மேலோங்கச் செய்தது.

# மீனம்மா



அவுஸ்ரேலிய நாட்டின் கிழக்குக் கரையில் காணப்படக்கூடிய அரிய மீனினங்கள் எல்லாம், 2050 ஆம் ஆண்டளவில் முழுமையாக அழியக்கூடிய அபாயம் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. அதற்கு மூலகாரணம் - அதிகரித்துவருகின்ற வெப்பநிலை எனக் குறிப்பிடப்படுகிறது. குயின்லாந்து பல்கலைக்கழக ஆராய்ச்சியின்படி - கடல் மாசடையும்போது, ஏற்படக்கூடிய விளைவுகளில் பெரும்பாலான அழிவு இக்கடல்வாழ் உயிரினங்களுக்கே எனக் கூறப்படுகிறது.

ஒரு காலத்தில் இந்த மீனினங்களை வைத்து பெருவாரியாக உழைத்த அவுஸ்ரேலிய அரசாங்கம் - மிகவும் இக்கட்டானநிலையில் காணப்படுகிறது.

ஆயிரக்கணக்கான மில்லியன் ரூபாவினை வருமானமாகப் பெற்றநிலை இப்போது இல்லை என்ற கருத்து நிலவிவருவது குறிப்பிடத்தக்கது. இது வெப்பநிலை அதிகரிப்புக்கான காரணமாகும். இதுமட்டும் சரிசெய்யப்பட்டுவிட்டால், ஏறக்குறைய 975 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சம்பாதிக்கக்கூடியதாக இருக்கும்.

# புதிய பதிவு

கொலைக்குற்றவாளிகளிடம் விசாரணைகள் மேற்கொள்ளும்போது, பலவேளைகளில் உண்மையை மறைத்துவிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்வார்கள். இதனால், கொலைக்குற்றவாளிகளின் மன உணர்வுகளை மாற்று வழிகளில் அறிந்துகொள்ள வேண்டியுள்ளது. எதுவிதமான குற்றங்களும் செய்யாதவர்கள் - பலவேளைகளில் தண்டனைக்குள்ளாக்கப்படுகின்றனர். விஞ்ஞானமுறையில் ஒருவர் பொய் பேசுகிறாரா என்பதை அறிவதற்கு, பொலிகிராப் எனப்படும் கருவியைப் பாவித்து வந்துள்ளனர். பொய்பேசும்போது எண்ண அலைகளில் ஏற்படும் மாற்றங்களை வரைபடங்களாக மாற்றி, அவற்றை ஆராய்வதன் மூலம் உண்மையைக் கண்டறிய முற்பட்டனர். ஆனால், பலவேளைகளில் தவறுகள் நிகழ்ந்துள்ளன.



ஒருவரின் கைவிரல் அடையாளத்தின் மூலம் பௌதிக அடையாளங்களைப் பதிவு செய்யும்முறை கடவுச்சீட்டுக்களில் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதேபோன்று எணண அலைகளைப் பதிவுசெய்யும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

கொலைக்குற்றவாளி ஒருவர் - கொலை ஒன்றை மேற்கொள்ளும்போது, பாவித்த தடயப்பொருட்களை குற்றவாளிக்குக் காண்பித்து, அந்த நேரத்தில் மூளையின் மின்சார அலைகளில் எற்படும் மாற்றங்களைக் கணித்து, கொலைசெய்தவரின் மனநிலையை துல்லியமாக கணித்துள்ளனர்.

அண்மையில் ஒக்லகோமாவில் தனது மனைவியையும், குழந்தையையும் படுகொலை செய்த ஜிம்பி ரேய் என்பவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இவர் மனைவியைக் கொலை செய்த இடத்தையோ அது தொடர்பான சம்பவங்களையோ நினைவில் மீட்டுக்கொள்ள முடியாதநிலையில் காணப்பட்டார்.

கொலைக்குப் பாவித்த கருவிகள், சம்பவம் நடைபெற்ற இடத்தின் தோற்றம் ஆகியவற்றைக் காண்பித்து, மூளையில் தோன்றிய மின்சார அலைகளை பகுத்தாராய்ந்து, கொலையை அமெரிக்க குற்றப்புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் நிருபித்தனர்.

# அழகிய ஆமை

கடல் ஆமைகள் நிலத்திலும், நரிலும் வாழும் இனத்தைச் சார்ந்தவை . இவை முட்டை இடும் காலத்தில் கடற்கரைகளை நோக்கி நகர்கின்றன. இவை மீன்பிடிப்பதற்கு உபயோகிக்கும் வலைகளில் சிக்கி, பல வேளைகளில் உயிரிழக்க நேரிடுகின்றது. ஓட்டிற்காக இவை வேட்டையாடப்படுகின்றன. இவற்றை அழிவின் விளிம்பிலிருந்து காப்பாற்றுவதற்கும், இவற்றின் நகர்வு (MIGRATION) தொடர்பான தகவல்கள் சேகரிப்பதற்கும் - கடல் தொடர்பான உயிரியலாளர்கள் (MARINE BIOLOGIST) ஆய்வுகளை மேற்கொணடு வருகின்றனர். இந்து சமுத்திரம், தென்கிழக்கு ஆசிய நாட்டு கடல்களில் தமது ஆய்வினை ஆரம்பித்துள்ளனர்.



பவளப்பாறைகள் (CORAL REEFS) உடைத்தெடுக்கப்படுவதாலும், கடற்புற்கள் அழிந்துபோவதாலும் இந்தவகையான ஆமைகள் தமது புகலிடங்களை இழந்துவிடுகின்றன. இதனால் கரையை நோக்கி முட்டையிடுவதற்காக நகரும் ஆமை இனங்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாகவும் ஆய்வாளர்களால் அவதானிக்க முடிந்துள்ளது.

முதன்முறையாக ஆமைகளின் நகர்வை அவதானிப்பதற்காக ரேடியோச் சமிக்கைகளை வெளிப்படுத்தும் சிறிய கருவிகளை ஆமைகளின் உடலில் பொருத்தியுள்ளனர். இந்தக் கருவியிலிருந்து வெளிப்படும் ரேடியோ சமிக்கைகளை செயற்கைக்கோள் உதவியினால் உள்வாங்கப்பட்டு, மீண்டும் பூமிக்குத் திருப்பி அனுப்பப்பட்டன. இந்தச் சமிக்கைகளின் உதவியுடன் ஆமைகளின் நகர்வை விஞ்ஞானிகளினால் அறியமுடிகிறது.

இதன்மூலம், 1975 ஆம் ஆண்டு அவுஸ்ரேலியாவின் கடற்கரைக்கு முட்டையிடுவதற்காக வந்த ஆமையொன்று, திரும்பவும் சென்ற ஆண்டு அதேகடற்கரைக்கு வந்ததாகத் தெரிவித்துள்னர். மேலும் இந்த ஆமை நாளொன்றுக்கு 26 கிலோமீற்றர் நகர்ந்ததாகவும் குயின்லாந்தைச் சேர்ந்த விஞ்ஞானி தெரிவித்துள்ளார்.

இவர் கடந்த 30 ஆண்டுகளாக ஆமைகளின் இடப்பெயர்ச்சி தொடர்பான ஆய்வில் ஈடுபட்டுவருகின்றார்.

# மாறும் புணர்ச்சி

சில முலையூட்டிகள் இனங்கள் மாறி புணர்ச்சியில் ஈடுபடுவதாக எடின்பரோ மற்றும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கருத்துக் கூறியிருக்கிறார்கள். அதிலும் சிறுத்தை ஒருபோதும் இனம் மாறிப் புணர்ச்சியில் ஈடுபடுவதில்லை எனவும் அவர்கள் கூறுகின்றார்கள். இம்மாற்றப் புணர்ச்சி மூலம் உருவாக்கப்படுகின்ற புதிய இனங்கள் ஒருவகை வித்தியாசத்துடன் காணப்படுவாகக் கூறப்படுகிறது. இவ்வகை ஆராய்சிக்கு வரிக்குதிரைகள், மான்கள் மற்றும் ஆடுகள் ஆகியவற்றில் ஆராய்ந்தபோது - தாயின் செல்வாக்கே குழந்தையில் காணப்படுவதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. 30 வருடங்களின் முன்பு இருந்த அமெரிக்க உயிரியல் விஞ்ஞானி ரொபேட் டிரிவஸ் ஏற்கனவே மானகளில் மாற்றப்புணர்ச்சி செயது, ஓரளவு வெற்றியீட்டியவர்.



ஆனால், தற்போதைய ஆராய்ச்சிகள் மிகவும் சிறப்பானதாகவும், அதி உன்னத வெற்றிகளைத் தரக்கூடியதாகவும் உள்ளதால், எதிர்காலத்தில் புதியவகை மிருக இனங்கள் தோன்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# பவளப்பாறைகள்

ஆழ்கடலில் காணப்படும் பவளப்பாறைகள் அழிக்கப்படுவதைத் தடுப்பதற்கு 1000 இற்கும் மேற்பட்ட கடல் ஆராய்ச்சியாளர்களும், உலகின் பல நாடுகளிலுள்ள அரசுகளும் கூட்டாக ஒப்பமிட்டு அறிக்கையொன்றை ஐக்கிய நாடுகள் சபையிடம் சமர்ப்பித்துள்ளனர்.



கடலின் அடிமட்டத்தில் காணபபடும் பவளப்பாறைகளைத் தோண்டி எடுக்கக்கூடிய உபகரணங்களை இழுவைப்படகுகளில் பொருத்தி, அவ்வகையான பாறைகளை அழித்துவருகின்றனர். இதனால் இழுவைப் படகுகளின் செயறபாடுகளை நிறுத்துமாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில பவளப்பாறைகளில் ஆயிரக்கணக்காண உயிரினங்கள் வாழ்கின்றன. இதனால் இவையும் அழிக்கப்பட்டுவிடுகின்றன. பவளப் பாறைகளை கடல்மட்டத்திற்கு எடுத்து வருவதற்குப் பாவிக்கும் வலைகளின் அடிப்பாகத்தில், பாரமான இரும்பு உருளைகளைப் பொருத்தி , கடல் மட்டத்தினூடாக இழுவைப்படகுகள்மூலம் இழுத்துச்செல்லப்படுவதால், பல அரிய உயிரினங்கள் அழிந்துவிடுகின்றன.

கடலின் அடிப்பாகத்தில் காணப்படும் பவளப்பாறைகள் - பாரிய மரங்களைப் போல் விரிந்து பரந்து காணப்படுகின்றன. இவற்றீல் காணப்படும் சில உயிரினங்கள் 2000 ஆண்டுகள் பழைமைவாய்ந்தனவெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பாறைகளில் மருத்துவப் பண்புகள் காணப்படுவதால், மருந்து தயாரிப்பில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் இவ்வினப் பாறைகளை ஆராய்ந்து வருகின்றன. நீண்டகாலமாக நீருக்கு அடியில் இவ்வகையான பவளப்பாறைகள் காணப்படுவதால், இவை உலகின் சூழலியல் மாற்றங்களையும் அறிந்து கொள்வதற்கு உதவமுடியும் எனவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இவற்றிடையே வாழும் உயிரினங்கள் அழகுடையவையாகவும் காணப்படுகின்றன.

தாழ்வான கடலின் அடிப்பாகத்தில் இவற்றை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. 1800 ஆம் ஆண்டளவில் ஆழமான கடலின் அடிப்பாகத்தில் இவை அமைந்திருந்ததை விஞ்ஞானிகள் அவதானித்தனர்.

இதனால், இந்த வகையான பாறைகளைக் காப்பாற்றவேண்டும் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

# புதிய நொக்கியா

தொலைபேசியின் ஒரு மாற்று வடிவமாக ஆரம்பித்த செல்லிடத் தொலைபேசி- கடந்த 10 ஆண்டுகளில் பல மாற்றங்களை உருவாக்கியுள்ளது. கணினியின் செயற்பாடுகள் - கையடக்கத் தொலைபேசியினுள் புகுத்தப்பட்டு, வருகின்றன. கம்பியில்லாத் தந்தியின் (WIRELESS) மாற்று வடிவமான செல்லிடத் தொலைபேசி இன்று கணினி, தொலைக்காட்சி ஆகியற்றின் பணிகளை ஒன்றாகச் செய்துவருகின்றது.




செய்திகள், உருவப் படங்கள், காகிதக் கோவைகள் மின் அஞ்சல், ஆகியவற்றை அனுப்பமுடிகின்றது.

கணினி ஒன்று இருக்கும் இடத்தை நாடிச்செல்லவேண்டிய தேவையை செல்லிடத்தொலைபேசி குறைத்துள்ளது.

உலகில் இதுவரை தோன்றிய தொடர்பு சாதனங்களான பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் பணிகளைச் செல்லிடத்தொலைபேசிகள் மேற்கொள்கின்றன.

# இராட்சத தொலைநோக்கி

விஞ்ஞானிகளால் ஒரு பெரிய இராட்சத தொலைநோக்கி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனுடைய பயன்பாடு பெரும்பாலும் 2007 ஆம் ஆண்டளவில் கிடைக்கக்கூடியவாறு இருக்குமென ஐரோப்பிய விண்வெளி ஆய்வுகூடம் கூறுகின்றது.



இன்பராரெட் கதிர்கள்மூலம் செயற்படக்கூடிய இந்த இராட்சத தொலைநோக்கிக் கண்ணாடி - 3.5 மீற்றர் ஆரையைக் கொண்டது.

இது சிலிக்கன் கார்பைட் எனும் ஒரு வகையான பதார்த்தத்தினால் ஆனது. இது மிகவும் பாரம் குறைந்த உலோகமாகும். இதனுடைய தடிப்பு ஏறத்தாழ 2.5 மில்லிமீற்றர் ஆகும். இதனுடைய பயன்பாட்டின்மூலம் தொலைவில் காணப்படக்கூடிய கோள்கள், நட்சத்திரங்கள் மற்றும் வால்வெள்ளிகள் ஆகியவற்றினை ஆராய்ச்சி செய்யக்கூடியதாக இருக்கும். இந்த இராட்சத தொலைநோக்கியானது ஹேர்சல் என்ற ரொக்கெட்டில் பொருத்தப்பட்டு வெற்றிகரமான ஆராய்ச்சியில் ஈடுபடும் என்பது நாஸா விஞ்ஞானிகளின் ஆரூடம். இது 2007 ஆம் ஆண்டுதான் சாத்தியமாகும். இன்னும் 3 வருடங்கள் பொறுத்திருக்கத்தான் வேண்டும்.

# திரை விமர்சனம்

## வர்ணஜாலம்



காதல்+அக்ஷன்+திரில் இவற்றின் கலவையே வர்ணஜாலம். இதனை அருமையாகக் காட்டியிருக்கிறார் இயக்குநர் நகுலன் பொன்னுசாமி. ஒரு சாதாரண வேலைக்காரனாக ஓய்வுபெற்ற பொலிஸ்கமிஷனர் நாசரின் வீட்டுக்குள் வருகின்ற ஸ்ரீகாந், அந்த குடும்பத்தையே பிரித்து சின்னாபின்னமாக்குகிறார். ஏன்? இந்தப்படத்திலும் வழக்கம் போல காவற்துறையின் அராஜகம் புட்டுவைக்கப்படுகிறது. இப்படியும தன்னால் நடிக்கமுடியும் என்று காட்டியிருக்கிறார். நாசரின் மகன் ஆனந்தசாமியைப் பைத்தியக்காரனாக்க திட்டம்போடும் ஸ்ரீகாந், எடைக்கல்லால் தன்கைகயையே உடைத்துக்கொண்டு, பழியை ஆனந்தசாமிமீது போடும் காட்சி உச்சக்கட்டம். இன்னொருபக்கம் நாசரின் தம்பி மனைவியை நாசருக்கெதிராகத் திருப்பிவிடுகிறார். சண்டைக்காட்சிகளில் பட்டைகிளப்பியிருக்கிறார். பிளாஷ்பேக்கில் வந்து பிளாஷ் அடிக்கிற நேரத்தில் அமரர் ஆகிவிடுகிறார் சதா - மருத்துவக்கல்லூரி மாணவி. குட்டிராதிகாவுக்குக் கொடுக்கப்பட்ட முதல் பாட்டு முழுக்க முழுக்க வீண். ஒரு கதாநாயகியை மேலதிகமாக நாயகி ஆக்கியிருக்கிறார்கள். ஐயோ பாவம் நகைச்சுவைக்கு கருணாஸ்+சிட்டிபாபு. பின்னணி இசையில் கோட்டைகட்டிய வித்தியாசாகர் - பாடல்களில் கோட்டை விட்டிருக்கிறார். "ஆனாலும் பிஞ்சுமழைச் சாரல்" பாட்டுக் கேட்கலாம். ஒளிப்பதிவாளர் பாலமுருகனின் கமரா ஜாலம் புரிந்திருக்கிறது. வண்ணங்களைக் குழைத்து வாரியடித்திருக்கிறார்.

வர்ணஜாலம் - ஈஸ்ட்மென்கலர்

- PNS-

# டிவிடி

DVD என சுருக்கமாக அழைக்கப்படும் DIGITAL VEDIO DISK - உலகில் இன்று அதிக விற்பனையாகும் இலத்திரனியல் உற்பத்திப் பொருளாகும். இசை, சினிமா, கணினி ஆகியவற்றில் பரந்த அளவில் மாற்றங்களை உருவாக்கியுள்ளது. தெளிவான படங்களையும், ஒலி அமைப்பையும் 'DVD' யின் மூலம் பார்க்கவும், கேட்கவும் முடிகின்றது. மேலும், நீல நிறமான ரேசர் கதிரின்மூலம் இயங்கும் 'DVD'கள் அதிகளவிலான செய்திகளை குறைந்த பரப்பளவில் உள்ளடக்கக் கூடியதாகவும் அமைந்துள்ளன.



DVD க்களுக்கு முன்னோடியாக அமைந்த ரெக்கோட்ஸ் (RECORDS) எனப்படும் தட்டுக்களில் மேடு பள்ளங்களை உருவாக்கி, ஊசி ஒன்றினை வட்டப்பாதையில் நகரச் செய்யும்போது உண்டாகும் அதிர்வினைக்கொண்டு ஒலியை உருவாக்குகிறார்கள். பின்னர், நாடாக்களில் (TAPES) ஒலி, ஒளி அலைகளை மின்காந்தத் துகள்களாக மாற்றி பதிவு செய்திருந்தனர். இவற்றில் காணப்பட்ட குறைபாடுகளை அகற்றி DVD எனப்படும் பளபளப்பான சிறிய தட்டுக்களில் ஒலி, ஒளி ஆகியவற்றினால் வெளிப்படுத்தக்கூடிய முறையைக் கண்டுபிடித்தனர்.

# மாயர்கள்

பெசெரெலி 1971 ஆம் ஆண்டு கௌதமாலாவில் பிறந்தார். 9 வயதாக இருக்கும்போது, பெற்றோருடன் அமெரிக் காவிற்கு நாடு கடத்தப்பட்டார். நியுயோர்க்கிலுள்ள பல்கலைக்கழகமொன்றில் தடயவியல் மானுடவியலாளராக (FORE NSIC ANTHOROPOLOGIST) பட்டப்படிபபை மேற்கொண்டு தேர்ச்சிபெற்றார். இவர் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக் கொணடிருந்த காலத்தில், புகழ்பெற்ற தடயவியல் மானுடவியலாளர் 'கரண்ரமே பேர்ன்ஷ்' என்பவரின் நட்பு கிடைத்திருந்தது.

இதே காலப்பகுதியில் கௌதமாலாவில் பழங்குடி மக்களான 'மாயர்களை' தீவிரவாதிகளுக்கு இடமளித்தார்கள் எனக் குற்றம் தெரிவித்து, அந்தநாட்டு அரசினால் இனப்படுகொலை மேற்கொள்ளபட்டுவந்தது. இந்தப்படுகொலையினால் 400 முதல் 600 வரையான கிராமங்கள் நிர்மூலமாக்கப்பட்டன. 200,000 'மாயர்கள்' படுகொலை செய்யப்பட்டு, புதைக்கப்பட்டனர். இதனால், இந்தப் படுகொலைகளுக்குக் காரணமானவர்கள் சட்டத் தின் முன்நிறுத்தப்படவேண்டும் - கௌதமாலாவைப் பிறப்பிடமாகக் கொண்ட பெசெரெலியும் நண்பரும் தீர்மானித்துக் கொண்டனர். இதனால், மாயர்கள் வாழ்ந்த பிரதேசத்தில் அமைந்துள்ள புதைகுழிகள் எல்லாவற்றையும் தோண்டி, அங்கு காணப்பட்ட எலும்புக்கூடுகளை விஞ்ஞான ஆய்வுக்குட்படுத்தினார்கள். தமது ஆய்வில் முக்கியமாக கொல்வதற்குப் பாவித்த கருவிகள், குண்டு உடலில் துளைத்த இடம், வெளியேறிய இடம், என்ன நிலையில் வைத்துக் கொலையைச் செய்தார்கள் ஆகிய விபரங்களை நிதானத்துடன் சேகரித்துக் கொண்டனர். தாம் கற்றிருந்த தடயவியல் தொடர்பான அறிவை முழுமையாகப் பிரயோகித்தார்கள்.



இவர்களின் ஆய்வின்மூலம் பல கொலைஞர்கள் சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டு, தண்டனை வழங்கப்பட்டது.

அத்துடன், இவர்கள் எவ்வாறு இறந்தார்கள், அவர்களின் எலும்புக்கூடுகள் எவை என்பதையும் இறந்தவர்களின் உறவினர்களுக்குத் தெரிவித்தார்கள். பல கொலைப் பயமுறுத்தல்கள் மத்தியில் தமது பணியினைத் தொடர்ந்தனர்.

12 ஆண்டுகள் தொடர்ந்த தேடுதல்மூலம், 3000 எலும்புக்கூடுகளை எடுத்திருந்தார்கள். தற்போது தொடர்ந்து எலும்புக்கூடுகளைத் தேடிவருகின்றனர்.

நேர்காணல் - க.தே.புரட்சிதாசன்



# மொழி கலாசாரத்தை பேணிப்பாதுகாக்கும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள்

தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வாழ்கின்றார்கள். இலங்கையிலிருந்து பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் வாழ்கின்ற போதிலும் எமது மொழி கலாசாரம் என்பவற்றைக் கைவிடவில்லை எனப் பெருமையுடன் கூறுகின்றார் தில்லைநடராசா.

மனிதவள அபிவிருத்தி கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் மேதிக செயலாளரும் எழுத்தாளருமான உடுவை எஸ். தில்லைநடராசா அண்மையில் - ஒரு மாத, இலக்கிய சுற்றுப்பயணம் மேற்கொண்டு அவுஸ்ரேலிய நாட்டுக்குச் சென்றிருந்தார். அவரை அவரது இல்லத்தில் சந்தித்தபோது, ‘நமது ஈழநாட்டிற்கு’ வழங்கிய செவ்வியைத் தருகின்றோம்.

*கேள்வி : தங்களின் அவுஸ்ரேலியப் பயணம் என்ன நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது.*

*பதில் :* நெடுங்கால நண்பர் சற்குணலிங்கத்தின் அழைப்பை அடுத்து, மேற்கொள்ளப்பட்ட கலை இலக்கியச்சுற்றுலா.

*கேள்வி : நீங்கள் கலை இலக்கியச் சுற்றுலா என்று எதற்காகக் குறிப்பிடுகிறீர்கள்.*

*பதில்:* கடமை காரணமாக வெளிநாடுகளுக்கு செல்லும்போது, குறிக்கப்பட்ட நோக்கம் ஒன்றில் இருக்கும். நோக்கத்தை அடைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். பயணம் முடிந்ததும் அது பற்றிய அறிக்கையை அமைச்சிற்கு சமர்ப்பிக்க வேண்டும். அதற்கு மாறுபட்ட வகையில், அவுஸ்ரேலிய நாட்டில் வாழும் நம்மவர்களைச் சந்திக்கக் கூடியதாகவும், அவர்களின் கலை இலக்கிய முயற்சிகள் பற்றி அறியக்கூடியதாகவும் அமையவேண்டும்.

*கேள்வி : சுற்றுலா என்றா குறிப்பிட்டீர்கள், சிற்றுலா என்றா குறிப்பிட்டீர்கள்.*

*பதில் :* சிற்றுலா என்றே குறிப்பிட்டேன். அவுஸ்ரேலியா எமது இலங்கையைப் போல 250 மடங்கு நிலப்பரப்பைக் கொண்ட கண்டம். 35 ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் வசிப்பதாக ஒரு தகவல். விமானம் விரைந்து செல்லும் ரெயின், மணிக்கு 100 - 50 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லக் கூடிய புதிய கார்கள், சிறந்த பாதைகள் எல்லாவற்றையும் பயன்படுத்தியும், மெல்போர்ன், சிட்னி, பிரிஸ்பேர்ன், கன்ரா ஆகிய இடங்களைத்தான் சுமராக பார்க்க முடிந்தது. போசு, டார்வின், தாப்மேனியா போன்ற இடங்களுக்குச் செல்லவே முடியவில்லை. அதனாலே ‘சிற்றுலா’ (சிறியபயணம்) எனக் குறிப்பிட்டேன்.

*கே: நீங்கள் ஒரு வாரத்திற்கும் அதிகமான காலம் பல இடங்களுக்கும் சென்றிருப்பதால், சந்தித்த எமது நாட்டு மக்களின், வாழ்க்கை பற்றி சில வார்த்தைகள் கூறமுடியுமா?*

ப: 1983 இற்குப் பின்பிருந்தே தொழிற்தகைமைகள் பெற்ற சிலர் தொழில் வாய்ப்புகளோடு அவுஸ்ரேலியாவில் குடியேறியிருந்தனர். 1983 இற்குப் பின்னர் நமது நாட்டில் தோன்றிய இனக்கலவரம் காரணமாக அவுஸ்ரேலியாவில் தொடர்ச்சியாக வாழ்ந்தவர்கள் தங்கள் உறவினர்கள் நண்பர்களை அழைத்தனர். பல தொழிற்சாலைகளும் வர்த்தக நிலையங்களும் இருப்பதால் இயந்திரங்களை இயக்கத் தெரிந்ததோடும், மனித வலுவைப் பயன்படுத்தி தொழில் செய்வோரும் தேவைப்பட்டனர். நம்மவருக்கு இந்நிலை சாதகமாய் அமைந்துவிட்டது.

*கேள்வி :அங்குள்ள தமிழர்களின் வாழ்க்கைத் தரம் எப்படி? சில நாடுகளில் கஷ்ரப்படுகின்றார்கள் என அறியமுடிகின்றது.*

பதில் : அவுஸ்ரேலியாவில் யாராவது கஷ்ரப்படுகின்றோம் என்று நம்மவர்கள் சொன்னால், அவர்களைக் கட்டிவைத்து அடிக்க வேண்டும். ஏனெனில் அனேகமாக எல்லோருக்கும் தங்கியிருக்க வீட்டுவசதிகள் செய்து கொள்ளலாம். வருமானம் தரக்கூடிய தொழில் பெறும்வரை அரசின் நிவாரண உதவிகள் உண்டு.

*கேள்வி : நிவாரணம் உணவுக்குப் போதுமானதா? வேறு செலவுகளும் உண்டா?*

பதில் : உதவிகளைச் சரியான முறையில் பயன்படுத்தினால், நன்றாகப் போதும். சாதாரணமாக மோட்டார் கார் ஒன்றை வாங்குவதற்கும், கல்வி உட்பட இதர அத்தியாவசியத் தேவைகளைப் பெறுவதற்கும் கிடைக்கும் நிதியுதவி போதுமானதென்று பலரும் தெரிவிக்கின்றார்கள்.

*கேள்வி: இங்கிருந்து பிள்ளைகளின் அழைப்பில் வயதான பெற்றோர்கள் கூட அவுஸ்ரேலியா சென்றுள்ளார்கள். அவர்கள் பற்றி...*

பதில் : ஆம், வீட்டில் எப்படியிருந்தாலும், வீட்டுக்கு வெளியேயும் அரச அமைப்புக்களைப் பொறுத்தவரையிலும் அவர்கள் மூத்த பிரஜைகள் என அழைக்கப்பட்டு கௌரவமாகவே நடத்தப்படுகின்றனர். மூத்த பிரஜைகளுக்கு புறம்பான அடையாள அட்டை வழங்கப்படுகின்றது. அந்த அட்டையைச் சமர்ப்பித்து - மருந்துகளைக் குறைந்த ‘கட்டணத்தில் பெறமுடியும். பிரயாணம் செய்ய முடியும். இன்னும் பல சலுகைகளும் உண்டு. ஆகவே, அவர்கள் நன்றாகவே இருக்கின்றார்கள்.

**அவுஸ்ரேலியாவில் யாராவது கஸ்ரப்படுகின்றோம் என்று நம்ம வர்கள் சொன்னால், அவரைக் கட்டிவைத்து அடிக்க வேண்டும். அனேகமாக எல்லோருக்கும் தங்கியிருக்க வீட்டுவசதிகள் செய்து கொள்ளலாம். வருமானம் தரக்கூடிய தொழில் பெறும்வரை அரசின் நிவாரண உதவிகள் உண்டு.**

*கேள்வி : நமது அடையாளத்தைப் பேணுவதற்கான நடவடிக்கைகள் பற்றி...*

பதில் : கூடிய வகையில் நான் பார்த்த வீடுகளில் நமது நாட்டிலிருப்பதுபோல் ‘சாமியறை’ என ஒரு அறையை வழிபாட்டுக்கு ஒதுக்கிவைத்திருக்கின்றார்கள். வசதி குறைவான வீடுகளில்கூட சுவாமிப் படங்களையும் சிறு சிலைகளையும் வைக்கக்கூடியதாக பெரிய அலுமாரியை வைத்திருக்கிறார்கள். வீட்டு வாசலில் காலணியைக் கழற்றிவிட்டு உட்செல்லும் பழக்கமும் உண்டு. கோவில்களில் திருவிழா, கூட்டுப் பிரார்த்தனை, ஆன்மீக உரையாடல்கள் போன்ற விடயங்களில் கவனஞ் செலுத்துகிறார்கள்.

*கேள்வி : தமிழில் கல்வி நடவடிக்கைகள், பத்திரிகைகள். இலக்கிய முயற்சிகள் பற்றி...*

பதில் : கூடுதலான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடனும், தங்களுக்குத் தெரிந்தவர்களுடனும் தமிழ் மொழியில் கதைப்பதையே விரும்புகின்றனர். மெல்போர்ன், சிட்னி போன்ற நகரங்களில் வார இறுதியில் சிறுவர்களுக்குத் தமிழ் மொழியைப் பயிற்றுவதற்காக சிறுவர் பள்ளிகள், அமைப்புகள் செயற்படுகின்றன. மெல்போர்னில் உள்ள பாரதி பள்ளியை உதாரணமாகக் குறிப்பிடலாம். இங்கு வார இறுதியில் நடைபெறும் வகுப்புகளுக்காக பெற்றோர்கள் தூர இடங்களிலிருந்து குழந்தைகளை அழைத்து வந்ததையும் காணமுடிந்தது.

சிறுவர்கள் ஆடல், பாடல், கற்றல் ஆகியவற்றில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபடுவதும் குறிப்பிடத்தக்கது.

*கேள்வி : எழுத்தாளர் விழா பற்றிக் கூறுங்கள்.*

பதில் : அவுஸ்ரேலியாவில் உள்ள தமிழ் எழுத்தாளர்கள் கூடி, 2004 ஆம் ஆண்டுக்கான எழுத்தாளர் விழாவை மிகவும் சிறப்பாகச் செய்தனர்.

கன்ரோவில் 25.01.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மூத்த எழுத்தாளர் ஜெ.முருகபூபதி தலைமையில் விழா இடம் பெற்றது. இதில் கூடியவரை எழுத்தாளர்கள், கலந்துகொண்டு தங்களின் படைப்புக்களைச் சமர்ப்பித்தனர். இலங்கையில் இருந்து நானும், தினக்குரல் பத்திரிகையின் ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த தேவகௌரியும், ஞானம்ஸ் சஞ்சிகையின் ஆசிரியர் ஞானசேகரனும் கலந்துகொண்டோம். ☆

புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் பகுதி XIII - சிவா சின்னப்பொடி

# தொடரும் அகதிவாழ்வின் அவலங்கள்

ஐரோப்பாவுக்குப் புலம்பெயர்ந்த ஏனைய நாட்டு அகதிகள் - அகதிமுகாம் வாழ்க்கையை ஏற்றுக்கொண்டதால் அவர்களுக்கு உணவு மற்றும் தங்குமிடம் என்பவற்றில் பிரச்சினை இருக்கவில்லை. அவர்கள் அங்கே தங்கியிருந்துகொண்டே தொழில் கல்வியை அல்லது தங்கள் தாய்நாட்டில் இடைநடுவில் விட்டுவிட்டுவந்த உயர்கல்வியைத் தொடர்ந்தார்கள்.

ஈழத்தமிழர்கள் அகதிமுகாம் வாழ்க்கையை பெரும்பாலும் நிராகரித்தால் - வீட்டு வாடகைக்காகவும் சாப்பாட்டுச் செலவுக்காகவும் உடனடியாக வேலை செய்யவேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டார்கள். அதைவிட இங்கே, தாயகத்தில் அடகுவைத்த நகைகளையும் - ஈடுவைத்த காணிகளையும் மீட்பதற்காக உடனடியாகப் பணம்அனுப்ப வேண்டிய அவசியம் அவர்களுக்கு இருந்தது.

இதனால், மற்ற நாட்டு அகதிகளைப்போல அந்த நாட்டு மொழியைக் கற்கவோ தொழில் கல்வியைக் கற்கவோ முடியாமல் போனது பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளில் - அகதிகள், மொழியை அல்லது தொழில் கல்வியை கற்கும் காலத்தில் அவர்களது அடிப்படை தேவைகளை பூர்த்திசெய்வதற்கு வேண்டிய பண உதவியை அந்த நாட்டுஅரசாங்கம் செய்தபோதிலும் - அதைவிட வேலை செய்தால் அதிகபணம் ஈட்டமுடியும் என்பதால் நமமவர்கள் கல்வியில் அக்கறை செலுத்தவில்லை. அந்தக் காலகட்டத்தில் இருந்த இந்த மனப்பான்மையே பிற்காலத்தில் ஏற்பட்ட பல பிரச்சினைகளுக்குக் காரணமாக அமைந்தது.

மொழியறிவும் தொழில்சார் நிபுணத்துவமும் இல்லாத நிலையில் நம்மவர்களால் - அடிமட்ட வேலைகளையே அதாவது, உணவு விடுதிகளில் பெரும் அலுவலகங்கள் பேருந்துகள் என்பவற்றை துப்பரவு செய்யும் பணியாளர்களாக இருப்பது, பல்பொருள் அங்காடிகளில் பொருட்களை தூக்கியெடுப்பது, இறக்குவது, இடம்மாற்றுவது முதலான வேலைகளையே செய்யவேண்டி ஏற்பட்டது.

ஜரோப்பாவில் எந்தவேலையும் இழிவான வேலையாக பார்க்கும் நிலையும் - செய்யும் வேலையைக்கொண்டு ஒருவரை இழிவுபடுத்தும் நிலையும் பொதுவாக இல்லை என்றாலும், ஐரோப்பாவுக்கு குடியேறிய வெளிநாட்டு குடியேற்றவாசிகள் மத்தியிலும் இனவாதிகள் மத்தியிலும் ஆங்காங்கே சில இடங்களில் இது இருக்கவே செய்தது.

இந்தப் போக்கை முற்றாக ஒழிப்பதற்காக பிரான்ஸ் போன்ற நாடுகளில் கடுமையான சட்டங்கள் குறிப்பாக, தொழிலாளர்களின் உரிமைகளை வலியுறுத்தும் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. தொழிற்சங்க உரிமை என்பது - தொழிலாளர்களுக்குரிய அடிப்படை உரிமைகளாகவும், தொழில் வழங்குனர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளையும் பாதிப்புக்களையும் தட்டிக்கேட்கின்ற வகையில் தொழிற்சங்கங்களின் பிரதிநிதித்துவத்தை சகல தொழிற்துறைகளிலும் கட்டாயப்படுத்தும் வகையிலும் சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தன.

பொதுவாக, பிரான்சில் உள்ள பெரும்பாலான உணவுப்பகுதிகளின் உரிமையாளர்களாக - கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் (போலந்து, ரஷ்யா, பல்கேரி), அரேபிய நாடுகளையும் (மொரொக்கோ, துனீசியா, அல்ஜீரியா) சேர்ந்தவர்களே இருந்தார்கள். துப்பரவு வேலைகளை செய்விக்கும் நிறுவனங்களின் உரிமையாளர்களாக அல்லது இயக்குனர்களாக - போத்துக்கல், அல்ஜீரியா, துனீசியா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களே இருக்கிறார்கள். இவர்களில் பெரும்பான்மையானவர்கள் இனமதமொழி நிற அடிப்படையில் வேறுபாடுகளைப் பார்க்கும் அடிப்படைவாதிகளாக மிகமோசமான சுரண்டல்காரர்களாக இருக்கிறார்கள்.

சட்டத்திற்குப் புறம்பான வகையில் குறைந்த சம்பளத்தைக்கொடுத்து அதிகவேலை வாங்குவதில் இவர்கள் கைதேர்ந்தவர்களாக இருந்தார்கள்.

உதாரணமாக 1980 - 1985 காலப்பகுதியில் பிரான்சின் சராசரி தொழிலாளியின் அடிப்படைச்சம்பளம் 3700 பிராங்காக இருந்தது. நம்மவர்களை வேலைக்கு வைக்கும் ஒரு உணவு விடுதி உரிமையாளர் 2500 பிராங் பதிவு செய்து சம்பளப் பட்டியலிட்டு தருகிறேன், 2000 ஆம் பிராங் காசாக கையில் தருகிறேன் என்பார். நம்மவர்கள் முழுச் சம்பளப்பட்டியலையும் 3700 பிராங் வாங்குவதைவிட 4500 பிராங் வாங்குவதே பெரிதென்று நினைத்து அந்த வேலைக்கு ஒப்புக் கொள்வார்கள்.

ஆனால், நம்மவர்களிடம் இந்த 4500 பிராங்கிற்கு அந்த உணவு விடுதி உரிமையாளர் 12 அல்லது 13 மணிநேர வேலை வாங்கிவிடுவார். உண்மையில் இந்த அளவு நேரவேலைக்கு பதிவுசெய்து பட்டியலிடுவதானால் 6000 முதல் 6500 பிராங் சம்ளபளம் பெறவேண்டும்.

இதைவிட இரவு 12மணிக்குமேல் வேலை செய்தால் இரண்டுமடங்கு சம்பளம் அரச விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமை நாட்களிலும் வேலைசெய்தால் 20 வீத அதிக சம்பளம் என்று சட்டங்கள் இருக்கின்றன.

இந்த வெளிநாட்டு முதலாளிகள் நம்மவர்களுக்கு குறைந்த சம்பளப் பட்டியல் இடுவதால் இந்த உரிமைகள் எல்லாவற்றையும் கிடைக்காமல் செய்துவிடுவார்கள். இதேவிட வேலைக்குச் சேர்ந்த புதிதிலேயே தொழிற்சங்கங்களைப் பற்றி - கள்ளர்கள் ஏமாற்றுக்காரர்கள் என்று ஒரு தவறான அபிப்பிராயத்தைப் பரப்பி விடுவார்கள். ஒருவர் தொழிற்சங்கத்தில் அங்கத்தவராக இருப்பதற்கு மாதம் 25 பிராங் கட்டவேண்டும். இவ்வாறு கட்டி அங்கத்தவராக இருப்பது பிற்காலத்தில் பலவகைகளிலும் உதவும் என்பதை நம்மவர்கள் உணருவதில்லை.

முதலாளிமார்களால் ஏமாற்றப்பட்டு வேலையிழந்து நடுத்தெருவில் நிற்கும் போதுதான் நம்மவர்களுக்கு தொழிற்சங்கங்களின் அருமையும் மொழியறிவு இல்லாததால் ஏற்பட்ட பாதிப்பும் தெரியவரும்.

ஒருவர் 5 வருடம் தொடர்ச்சியாக வேலை செய்தால் அவர்வேலை இழக்கும் காலத்தில் அவர்பெற்ற முழுச்சம்பளத்தில் 80 வீதம் 2 வருடகாலத்திற்கும் - 60 வீதம் அடுத்த வருடகாலத்திற்கும் தொழில் இழப்பு உதவிப் பணமாக வழங்கப்படும்.

இந்த காலகட்டத்தில் ஒருவர் தொழில் கல்வியை கற்பவராக இருந்தால் - அந்தக் கல்வி முடியுமட்டும் அவர்வேலை செய்த காலத்தில் பெற்ற சம்பளத்தில் 80 வீதம் குறைக்கப்படாமல் வழங்கப்படும்.

ஆனால், நம்மவர்கள் - முதலாளிமார்களால் ஏமாற்றப்பட்டு பதிவுசெய்யாமல் வேலை செய்வதால் - இந்த உரிமைகளை அவர்கள் பெறமுடிவதில்லை.

உதாரணமாக, பாரிசின் மையப்பகுதியில் அமைந்திருந்த எகிப்து நாட்டவர்களை உரிமையாகக் கொண்ட உணவு விடுதி ஒன்று- அரசாங்கத்திடம் கணக்குக் காட்டாமல் மறைத்துச் செயற்பட்ட குற்றத்திற்காக 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் - வருவாய் துறை அதிகாரிகளால் மூடப்பட்டது.

48 பேர் வேலை செய்த அந்த உணவு விடுதியில் 8 பேர் இலங்கைத்தமிழர்கள். காலை மாலை இரவு என்று 12 மணி நேரம் வேலை செய்த இவர்களுக்கு 2 மணிநேரப் பதிவே இருந்தது. திடீரென்னு இந்த உணவு விடுதி மூடப்பட்ட போது இவர்களுக்க 2 மணிநேரம் வேலை செய்வதற்கான 80 % பணமே தொழில் இழப்பு உதவித் தொகையாகக் கிடைத்தது

தங்களை ஏமாற்றிய உணவுவிடுதி உரிமையாளருக்கு எதிராக இந்த 8 இளைஞர்களும் ‘புருடம்’ எனப்படும் தொழில் பிணக்கு நீதிமன்றத்தில் வழக்குதொடர்ந்த போதிலும் அவர்கள் அந்த உணவு விடுதியில் 12 மணி நேரம் வேலை செய்ததை சட்டபூர்வமாக நிரூபிக்க முடியாமல் போனதால் அந்த வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

1993 ஆம் ஆண்டு பிரான்சின் மிகப் பெரிய தொழிற்சங்கமான CGT இன் உணவுவிடுதிப் பிரிவு வேலைக்கு பொறுப்பாக இருந்த அலெக்ஸாண்டர் ஹியம் என்பவரை நான் சந்தித்து உணவு விடுதிகளில் சிற்றூழியர்களாக இருக்கும் இலங்கைத் தமிழர்களின் நிலை பற்றிக் கேட்டபோது -

தங்களுடைய கணக்கின்படி 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை பாரிஸிலுள்ள உணவு விடுதிகளில் 8400 இலங் கையர்கள் வேலை செய்வாகவும் அதில் 212 பேர் மட்டும் தங்களது தொழிற்சங்கத்தில் சேர்ந திருப்பதாகவும் கூறினார். இதை விட அவர் கூறிய ஒரு கருத்து மிக முக்கியமானது.

(தொடரும்)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்.

திருக்குறள்.

## நமது நோக்கு

### இன்றைய அரசியல் யதார்த்தம்

இலங்கையின் பதின்மூன்றாவது நாடாளுமன்றத்தைத் தேர்ந்தெடுக்கும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்வதற்கான இறுதிநாள் இன்றாகும்.

தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும், சுயேட்சைக்குழுக்களும் தங்கள் தங்கள் அணிகளில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதிலும் தேசியப் பட்டியில் உறுப்பினர்கள் தேர்வுக்கான நபர்களை இனங்காணுவதிலும் பெரும் குழப்பங்கள், முரண்பாடுகள் மற்றும் போட்டாபோட்டிகள் ஆகியவற்றை சமாளிக்கும் இறுதிக் கட்டச் செயற்பாடுகள் யாவும் நீங்கள் இதனைப் படித்துக் கொண்டிருக்கும் போதில் முடிந்திருக்கும்.

சந்தர்ப்பவாதக் கூட்டணிகள், சுயநல சுயேட்சைக் குழுக்கள், பேரினவாத அமைப்புக்கள் எனப் பல்வேறுபட்ட அரசியல் நோக்குக்கொண்ட கட்சிகள் இந்தத் தேர்தலில் மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றக் கதிரைகளை எப்படியாவது கைப்பற்றிக்கொள்ளும் நாற்காலிக் கனவுகளுடன் களத்தில் இறங்கியுள்ளன.

தென்பகுதி அரசியலில் இரு பிரதான அரசியல் கூட்டணிகளான ஐக்கிய தேசிய முன்னணியும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் தத்தம் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக தங்கள் தங்கள் தோழமைக் கட்சிகளுடன் பேரம்பேசி, தேர்தல்கால புரிந்துணர்வு உடன்பாடுகளை இரகசியமான நிபந்தனைகளின் அடிப்படையில் எட்டியுள்ள நிலையில், ஏனைய சுயேட்சைக் குழுக்களையும் தம்முடன் இணைத்துக்கொள்வதற்கான முயற்சிகளிலும் கடைசிக் கணம் வரை தீவிரமாக ஈடுபட்டு இருந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடைசிநேரக் கட்சித்தாவல்களும் கழுத்தறுப்பு நடவடிக்கைகளும் அரசியல்வாதிகளின் தேர்தல்கால பாரம்பரிய செயற்பாடுகளாக இந்தத் தேர்தலிலும் நடந்தேறியுள்ளன.

அதேசமயம், பேரினவாதிகளின் சதிகளுக்கு ஆட்பட்டு தத்தம் இனத்தின் ஒருமைப்பாட்டை பதவி ஆசைகளுக்காக பலிகொடுத்த சிறுபான்மை இனக் கட்சிகளான முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், வடக்கு- கிழக்கு தமிழ்க் குழுக்கள் வழமைபோன்று அரசியல் குயுக்திகளைக் கையாள்வதன்மூலம் - தமது அரசியல் சுயநலத் தன்மையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளன.

பிரதான இரு பேரினவாதக் கூட்டணிக் கட்சிகளுடன் இவர்கள் ஒட்டிக்கொண்டதன்மூலம், தாங்கள் இன்னமும் தங்கள் இனத்தை - அதன் ஒருமைப்பாட்டை பாதுகாக்கும் பக்குவமற்றவர்களாகவே உள்ளனர் என்பதை உறுதிப்படுத்தியுள்ளதுடன், தொடர்ந்தும் தாம் குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்புகளாக இருப்பதையும் பகிரங்கப்படுத்தியும் உள்ளனர்.

ஒன்றிணைந்து செயற்பட்டு தம் இனத்தின் ஒருமைப்பாட்டை பேரினவாத சக்திகளுக்கு உணர்த்தவேண்டிய திருப்புமுனையான காலகட்டத்தில் பொறுப்பின்றி, இன விசுவாசமற்று நடப்பவர்களை சரித்திரம் என்ன பெயரில் பதிவு செய்துகொள்ளும் என்பதை கூறவேண்டிய அவசியமில்லை.

தமிழ் மக்களும் இவர்களின் கடந்தகால செயற்பாடுகளின் அடிப்படையில் தமது அனுபவப்பட்டறிவின் மூலம் இத்தகையோர் எத்தகைய ஆபத்தான பெயர்வழிகள் என்பதை இனங்கண்டுகொண்டவர்களாகவே உள்ளனர்.

எண்பதுகளின் முற்பகுதியில் ஆரம்பித்த இவர்களின் சுயநலக் காட்டிக்கொடுப்பு அரசியல் நடவடிக்கைகள் யாவும் கடந்த ஒன்றரை தசாப்தத்திற்கும் அதிகமான காலப்பகுதிக்குள் தமிழ்மக்களின் பாரம்பரிய வதிவிடப் பிரதேசத்தினுள் ஏற்படுத்தியுள்ள அவலமிகு தாக்கங்களை தமிழ்மக்கள் எந்தக்காலத்திலும் மறக்கமாட்டார்கள் என்பது திண்ணம்.

ஆனால், தமிழ்மக்களை ஏமாளிகள் என நினைத்து இவர்கள் தொடர்ந்தும் வாக்குக்கேட்டு - வாக்குறுதிகளை அளிக்க முன்வருவதுதான் வேடிக்கையானதாகும்.

சிறுபான்மை சமூகத்தவரின் - குறிப்பாக தமிழ் பேசும் மக்களின் ஒரே தலைமையின் கீழான உரிமைக்குரலை ஓங்கி ஒலிக்கவிடாது குழப்பும் பேரினவாத தலைமைகளின் சதிக்கு உறுதுணையாக செயற்படும் தமிழ் அமைப்புக்கள், தமிழினத்தின் நீண்ட நெடுங்கால போராட்டத்தின் விலை மதிக்கமுடியாத தியாகங்கள், அர்ப்பணிப்புக்கள் அனைத்தையும் வெறும் சுயநல அரசியல் பதவிகளைப் பெற்றுக் கொள்ளும் இலக்குடனான அற்பச் செயல்களின் மூலம் கொச்சைப்படுத்தி வருவதுதான் வேதனைக்குரிய விடயமாகும்.

'தண்ணீர் விட்டோ வளர்த்தோம்
சர்வேசா இப்பயிரை
கண்ணீரால் காத்தோம்
கருகத் திருவுளமோ?' என்ற பாரதியாரின் பாடல் உணர்த்தும் அழுத்தமான சுதந்திர உணர்வுடன்கூடிய வேதனையின் அர்த்தத்தை இவர்கள் உணர்ந்துகொள்ளத் தவறியமைக்கு இவர்களின் இன உணர்வற்ற மனோபாவமே காரணமாகும்.

ஆனால், தன்மானமும், இனமானமுமிக்க மக்களின் ஒருமித்த குரலாக தமிழர் பகுதிகளில் இந்தத் தேர்தல் முடிவுகள் இருக்கவேண்டிய அவசியத்தை தமிழினம் உணர்ந்துகொண்டுள்ள இந்த சமயத்தில் தமிழின விரோத சக்திகளின் கூப்பாடுகள் எடுபடாது என்பதே இன்றைய அரசியல் யதார்த்தமுமாகும்.

## நாடும் நடப்பும்




செய்தி:- தமிழர் கூட்டமைப்பை சிதைக்க சமாதான விரோத சக்திகள் ஒன்றிணைந்து கடும் முயற்சி

# அரச ஊடகங்களின் பணிப்பாளர்களுக்கு தேர்தல் ஆணையாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

அரச ஊடகங்களின் செயற்பாடுகள் குறித்து தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க - அந்த ஊடகங்களின் பணிப்பாளர்களுக்கு எச்சரிக்கைக் கடிதங்களை அனுப்பியுள்ளார்.

தேர்தல் காலத்தில் செயற்படவேண்டியவிதம் குறித்து, தம்மால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைவாகச் செயற்படாவிட்டால், அந்த ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரு அதிகாரசபையைத் தாம் நியமிக்க வேண்டியேற்படும் என்றும் அந்த எச்சரிக்கைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கே தேர்தல் ஆணையாளரினால் இந்தக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தமக்கு இத்தகைய கடிதம் ஒன்று கிடைத்திருப்பதை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க உறுதிப்படுத்தினார்.

அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தச்சட்டத்தின்கீழ் தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரமே, அவர் இந்தக் கடிதங்களை அரச ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திருத்தச் சட்டத்தின்கீழ் அரச ஊடகங்களைத் தேர்தல் ஆணையாளர் பொறுப்பேற்கமுடியுமெனவும் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதேவேளை, தனியார் ஊடகங்கள் பலவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அவரது குடும்பததினருக்கும் நெருங்கிய தொடர்புடையவை என்ற வகையில், அவை அதிகம் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாகச் செயற்பட்டு வருவதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர குற்றஞ்சாட்டியுள்ளார்.

## வடக்கு - கிழக்கில் 120 பாடசாலைகளுக்கு விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கிலுள்ள 120 பாடசாலைகளுக்கு விஞ்ஞான ஆய்வுகூடங்கள் அமைப்பதற்கு, மத்திய கல்வியமைச்சு தீர்மானித்துள்ளதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் தெரிவித்தார்.

இதனடிப்படையில் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் ஒவ்வொரு வலயத்திலிருந்தும் ஐந்து படசாலைகள் வீதம் தெரிவு செய்யப்பட்டு, விஞ்ஞான ஆய்வுகூடங்கள் அமைக்கப்படுவதுடன், அவற்றுக்கான உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

உலகவங்கியின் உதவியுடன் செயற்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின்கீழ், வடக்கு - கிழக்கு மாகாணத்தின் ஒவ்வொரு வலயத்தையும் சேர்ந்த 25 பாடசாலைகளுக்குக் கணிதபாட உபகரணங்களும், இரு பாடசாலைகளுக்கு விஞ்ஞான உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(17)

## குண்டு துளைக்காத அங்கிகளை ஐ.தே.க கொள்வனவாம்!

### இணையத்தளம் தகவல்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகத் தமக்குச் சார்பான காடையர்களுக்கு 250 துப்பாக்கிக் குண்டு துளைக்காத ஆடைகளைக் கொள்வனவு செய்ய ஐக்கிய தேசியக் கட்சி முடிவுசெய்துள்ளதாகச் சிங்கள இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது-

இந்த ஆடைகளுக்கான கட்டளையை ரஷ்யாவிலுள்ள தொழிற்சாலை ஒன்றில் ஐக்கிய தேசியக் கட்சி சமர்ப்பித்துள்ளது. இது ஒன்றின் விலை 1.7 மில்லியன் ரூபா ஆகும்.

ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் வெற்றி பெறுவதற்காகவே இவ்வாறான செயற்பாட்டை மேற்கொண்டுள்ளது. கிராமப்புறங்களிலுள்ள பிரதான வாக்களிப்பு நிலையங்கள்மீது தாக்குதல் நடத்த ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னால் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திட்டமிட்டுள்ளனர்.

அத்துடன், முன்னாள் அமைச்சர் ஒருவர் தனது வாசஸ்தலத்திற்கு அருகில் மிகவும் இரகசியமான இடத்தில் அசிட் போத்தல்களைப் புதைத்து வைத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் இந்தத் திட்டங்களை முறியடித்து, மக்களைக் காப்பாற்றுவதற்கு ஜனாதிபதியின் செயலாளரிடம் சிலர் சென்று முறையிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# போர்நிறுத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் இரண்டு தரப்பினரும் வெற்றிபெற்றுள்ளனர்

## போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தலைவர் பேட்டி

(கொழும்பு)

போர்நிறுத்த உடன்பாட்டில் கைச்சாத்திட்ட இரண்டு தரப்பினரும் இந்த இரண்டாண்டு காலத்தில் அதை நடைமுறைப்படுதது வதில் வெற்றி பெற்றிருந்தார்கள்.

இவ்வாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் புறூவ்ஹொவ்டே -

போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்த இரண்டாண்டு நிறைவையொட்டி பி.பி.சி தமிழோசைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

இந்தப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில் - போர்நிறுத்த ஒப்பந்தங்களால் முதலில் சண்டை நிறுத்தப்பட்டு, இருதரப்பும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்கள்.

இலங்கையில் நடக்கும் விடயங்களில் சர்வதேச சமூகமும் ஆர்வம் காட்டுகிறது. இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவாக சர்வதேச சமூகம் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள எண்ணியுள்ளது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு இருதரப்பும் இந்த இரண்டாண்டு காலத்தில் நல்ல ஆதரவும், ஒத்துழைப்பும் தந்துள்ளனர்.

போர்நிறுத்த ஒப்பந்த மீறல்கள் சமாதான நடவடிக்கைகளைப் பாதிப்பதாகக் கூறமுடியாது. ஆனால், இந்த மீறல்களைப் பெரிய விடயமாகப் பார்க்கிறோம் என்றார்.

போர்நிறுத்த மீறல்களில் எமது உத்தரவை இருதரப்பினரும் மதித்து நடந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

## அரசியல் நோக்கு - ஆதி



# பேரினவாதிகள் கட்சியால் வேறுபட்டாலும் தமிழரை ஒடுக்குவதில் ஒன்றுபட்டவர்களே

நாடாளுமன்றப் பொதுத்தேர்தலுக்கு நாட்குறித்துவிட்டே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதாக, அரசியல் வட்டாரங்களில் விசனம் தெரிவிக்கப்பட்டுவருகிறது.

இலங்கை அதிபர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, சர்வாதிகார ரீதியாக மேற்கொள்ளும் நடவடிக்கைமூலம் நாட்டின் எதிர்காலம் அதலபாதாளத்திற்கு இட்டுச் செல்லப்படுவதாகவும், சமாதான முன்னெடுப்புக்கள் கேள்விக்கிடமாகியுள்ளதாகவும் பிரதமர் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு தரப்பு குற்றஞ் சாட்டி வருகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் நடவடிக்கைகளும் ஜனாதிபதியின் நடவடிக்கைகளும் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதனையும், தமிழ் மக்களுக்கு எந்த விதமான அதிகாரங்களையோ உரிமைகளையோ வழங்காமல் தமது பேரினவாத நடவடிக்கைகளின் மூலம் தமிழர்களை ஒடுக்குமுறைக்கு உட்படுத்துவதனையும் நோக்காகக் கொண்டவை என்பது தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமல்ல சர்வதேசத்திற்கும் இன்று அம்பலமாகியுள்ளது.

ஆனால், உண்மையில் ஐக்கிய தேசிய முன்னணியின் நிலைப்பாடு தொடர்பாகவும் தமிழ் மக்கள் மத்தியிலும் சர்வதேசத்திலும் தவறான அபிப்பிராயமே ஏற்பட்டுள்ளது என்று கூறவேண்டும். ஏனெனில், தமிழர்களின் உரிமைகளையும் தனித்துவத்தையும், தமிழர்களின் கல்வி, பொருளாதாரம், அரசியல் ஆளுமைகள் என்ற சகல கட்டுமானங்களையும் சிதைவடையச் செய்து தமிழர்களை நடைப்பிணங்களாக்கிய பெருமை ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையினையே சாரும்.

இந்த வகையில் பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசிய முன்னணி என்ற பேரினவாதக் கட்சிகள் தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் இரண்டல்ல, ஒன்றே என்பதனை தமிழ் மக்கள் மறந்துவிடக் கூடாது. ஆகவே, இருமலை விற்றுத் தும்மல் வாங்கும் நடவடிக்கை எமக்கு வேண்டியதல்ல. அந்த வகையில் தமிழ் மக்கள் பேரினவாதிகளை முற்றாக நிராகரிப்பர்.

காலங்காலமாக ஆட்சியில் இருக்கும் இந்தப் பேரினவாதக் கட்சிகள் ஒரேவிதமான அரசியல் அணுகுமுறை ஒன்றைக் கையாண்டு வந்துள்ளன. அதாவது, தமிழ் மக்களுக்குத் தீர்வு ஒன்றை ஆளுங் கட்சி முன்வைக்கின்றபோது எதிர்க் கட்சி அதனை எதிர்ப்பது. இதற்கு, எமது இனத்தவர்கள் பலரும் பகடைக்காய்களாகப் பயன்படுத்தப் பட்டனர். தமது கைப்பொம்மைகளான அத்தகைய அரசியல்வாதிகளுக்கு அமைச்சுப் பதவியும், அற்ப சலுகைகளும் போதுமாக இருந்தது. வெளியுலகுக்கு பிரசாரப் பொருளாக இவர்கள் இருந்துவந்தனர். அபிவிருத்திப் பணிகள் செய்வதாகவும், வேலை வாய்ப்பை வழங்குவதாகவும் கூறும் வார்த்தைகளுக்காகத் தமிழ் மக்கள் முன்பு இவர்களுக்கு வாக்களித்தனர். ஆனால், இன்று மக்கள் மிகவும் தெளிவாகவுள்ளனர்.

எமது சொந்த மண்ணில் சொந்த வீட்டில் வாழ்வதற்கான அடிப்படை வாழ்வியல் உரிமைக்காக யாழ். மக்கள் முடிந்தவரை போராடினர். அதனை ஏற்று அந்த மண்ணின் துன்ப - துயரங்களை நிவர்த்திசெய்யும் பலம் அல்லது சக்தி எந்த அரசியல் சக்திகளிடமும் இல்லை என்பதனை நன்கு அறிந்துகொண்டனர். இதற்குப் பின்னரும் நலிவுற்ற மக்கள், வாழ்வியல் உரிமை மறக்கப்பட்டு பன்னெடுங்காலமாக அவல வாழ்வு வாழும் எமது மக்கள், அத்தகைய பேரினவாதக் கட்சிகளுக்கும் அவர்களின் கையாட்களுக்கும் வாக்களிப்பார்கள் என்று எண்ணுவது தவறாகும்.

தமிழ் மக்கள் இன்று தமது தமிழ்த் தேசியத்திற்கான விடுதலைப் போரட்டத்தையும் அதன் வெற்றியையுமே நம்பியுள்ளனர். இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும், இரண்டு சமபலம் கொண்ட தரப்பாகவே புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் யுத்த நிறுத்தத்திலும் கைச்சாத்திட்டுள்ளன. அதன் பின்னர் சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. விடுதலைப் புலிகள் இராஜதந்திர ரீதியில் அரசுக்குப் பல பின்னடைவுகளை ஏற்படுத்தி, தமது பக்கம் வெற்றிகளைக் குவித்த வண்ணம் காய் நகர்த்தல்களை மேற்கொண்ட வேளையிலே தான், சந்திரிகா அம்மையாராலும், ஜே.வி.பி போன்ற இனவாதிகளின் கூட்டாலும், அரசியல் ஆடுகளத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தரப்பு சகலவற்றையும் இழந்து திராணியற்று நிற்கின்றது.

இங்கு தமிழ் மக்கள் கவனத்தில் சொல்லவேண்டிய முக்கியமான விடயம், ஒவ்வொரு பேச்சுக்களின் முடிவினும் எட்டப்பட்ட தீர்மானங்கள் எதனையும் நிறைவேற்ற ரணில் அரசும் அக்கறை காட்டவில்லை. ஆனால், அமெரிக்காவுடனும், இந்தியாவுடனும், பாதுகாப்பு ஒப்பந்தம் செய்யவும், இராணுவ கடற்படைகளுக்குரிய ஆயுத தளபாடங்கள் கடற்கலங்கள் என்பன கொள்வனவு செய்யவும் அதே அரசு அதிக ஆர்வம் காட்டியது. அதுமட்டுமன்றி சுதந்திர தினத்திற்கு இராணுவத்தினர் நடத்திய ஆயுதக் கண்காட்சிகூட தமிழ் மக்களை அச்சுறுத்தும் நோக்கம் கொண்டதாகவே அமைந்திருந்தது.

**அமைச்சுப் பதவியையும் அற்ப சலுகைகளையும் அனுபவித்து வரும் அரசியல்வாதிகள் - அபிவிருத்திப் பணிகள் செய்வதாகவும், வேலை வாய்ப்பை வழங்குவதாகவும் கூறும் வார்த்தைகளுக்காகத் தமிழ் மக்கள் முன்பு வாக்களித்தனர். ஆனால், இன்று அவர்கள் மிகவும் தெளிவாகவுள்ளனர்.**

எனவே, வெளியுலகுக்கு பேச்சுவார்த்தையில் நம்பிக்கையுடன் செயற்படுவதாகக்கூறி டோக்கியோ மாநாட்டில் கிடைத்த 450 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் பெற்றுக் கொள்வதிலேயே அக்கறையாக இருந்தது. அந்த நிலையில்தான் மனம் பொறுக்காத ஜனாதிபதி தனது அரசியல் பழிவாங்கல் நாடகத்தை அரங்கேற்றியுள்ளார்.

இந்த நிலையில் விடுதலைப் புலிகளும், சகல வழிகளாலும் தம்மைப் பலப்படுத்தியுள்ளனர். பலப்படுத்தியுள்ளனர் என்பதைவிட சகலவற்றுக்கும் தயார் நிலையில் உள்ளனர் என்பதே இங்கு பொருத்தமானது. தமிழரது தேசிய விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்திய சக்திகளின் தலைகுனியும் படியாக இன்று சர்வதேசமே தமிழர்களையும் அவர்களது ஏகப் பிரதிநிதிகளையும் மதித்து நிற்கின்றது. விடுதலைப் புலிகள் உலகின் சகல நாடுகளுக்கும் சென்று எமது போராட்டத்தின் நியாயத்தன்மையைத் தெளிவுபடுத்தி வருகின்றனர். பதிலுக்குப் பலநாட்டு நாடாளுமன்றங்களும் புலிகளின் பிரதிநிதிகளை வரவேற்றுப் பெருமையடைகின்றன. தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் புலிகளின் பத்து உறுப்பினர்களைத் தேர்தல் கண்காணிப்பாளர்களாக அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டிருப்பது ஈழவிடுதலைப் போராட்டத்தில் இக்காலம் ஒரு வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளமையைக் கோடிட்டுக் காட்டுகிறது.

அந்த வகையில் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கும் எமது இனம் எமது தமிழ்த் தேசியத்தைக் காப்பதற்காகவும், ஈழவிடுதலையினையும் அதற்காகச் செய்யப்பட்ட தியாகங்களையும் புனிதப்படுத்துவதற்காகவும் ஒரு அணியின் கீழ்த் திரண்டு தனது பலத்தை தென்னிலங்கைக்கும், சர்வதேசத்திற்கும் வெளிக்காட்டவேண்டும். அதுவே இன்றைய காலத்தின் தேவை.

## செய்திக் கட்டுரை -த.கஜமுகன்

# படையினரின் சுயலாபத்திற்காக அழிக்கப்படும் கண்டல் தாவரங்கள்

யாழ் குடாநாட்டில் அண்மைக் காலமாக படையினரால் அதிகளவான கண்டல் தாவரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, வலிகாமம் பிரதேசத்திலும், தென்மராட்சியின் சரசாலை - பருத்தித்துறை வீதியிலும் காணப்படுகின்ற கண்டல் தாவரங்கள் படையினரால் அழிக்கப்பட்டுள்ளது.

படையினரின் இந்த நடவடிக்கையால், சூழல் சமநிலை பாதிக்கப்பட்டு, சுற்றுப்புறச் சுழல் பாரிய அழிவிற்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்படப்போகும் பாதிப்புக்கள் பற்றி படையினர் கருத்திற்கொள்ளவேயில்லை. தமது பாதுகாப்பை மட்டுமே கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

இதனால், நீர்வாழ் உயிரினங்களுக்குப் பாதுகாப்பின்றிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன், உல்லாசப் பறவைகள் பலவற்றின் சரணாலயங்களாகவும் உள்ள இந்தக் கண்டல் காடுகள் அழிக்கப்பட்டால், பறவைகள் - சரணாலயம் இன்றிப் பெரும்பாதிப்பை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

சேற்று நிலங்களில் காணப்படும் இந்தக் கண்டல் காடுகள் தமக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாகக் கருதும் படையினர், முற்றாக அவற்றை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்குக் காரணம் - இந்தக் கண்டல் காடுகள் வழியே கடந்த காலங்களிலும், தற்போதும் புலிகள் ஆயுதங்களை யாழ். குடாநாட்டுக்குக் கொண்டுவருதாகப் படையினர் கருதுவதாலும், யுத்தம் ஏற்பட்டால் புலிகள் இக்காடுகளிடையே நின்று தம்மீது போர்தொடுக்கலாம் எனக் கருதுவதாலுமே, படைத்தரப்பு கண்டல் காடுகளை அழித்துவருகின்றது.



கண்டல் தாவரங்கள் அழிக்கப்பட்டு மீண்டும் அவை துளிர்விடும்போது, படையினர் மீண்டும் அதனை அழித்து வருகின்றனர். படையினரின் இந்த நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த எந்தத் தரப்புமே முன்வராதுள்ளமை பெரும் வேதனைக்குரிய விடயமாகும்.

சிங்களப் பிரதேசங்களில் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கவென அரசாங்கத்தால் ஒரு குழுவே அமைக்கப்பட்டு, அந்தக் குழு கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

ஆனால், இங்கே படையினரின் இந்தச் செயலைத் தட்டிக்கேட்க அரசாங்கம் எந்த அமைப்பையும் உருவாக்கவில்லை. தங்கள் தேசம் மட்டும் நன்றாக இருக்க வேண்டும் என்று கருதும் அரசு, தமிழரின் பிரதேசங்கள் எவ்வாறு இருந்தாலும் அதைப்பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை.

யாழ்.குடாநாட்டின் சூழல் சமநிலை குழப்பம் அடைவதால், பாதிபபுக்கள் பலவற்றை எதிர்கொள்ளப் போவது தமிழ் மக்களே.

படையினரின் இந்தச் செயலிற்கு மக்கள் பலர் எதிர்ப்பு தெரிவித்திருந்தும், படையினர் அதைப் பொருட படுத்தவில்லை. தமத சுயநலமும் பாதுகாப்புமே அவர்களுக்கு முக்கியமானதாகும்.

கண்டல் காடுகள் படையினரால் அழிக்கப்பட்டு வருவதற்கு இதுவரை யாழ். குடாநாட்டில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் எதிர்ப்புத் தெரிவிக்கவுமில்லை, சம்பந்தப்பட்ட தரப்பிற்குத் தெரியப்படுத்தவுமில்லை.

இதனால், மக்கள் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

நீண்டகாலம் உயிர்வாழக் கூடிய இந்தத் தாவரங்கள் - படையினரால் சின்னாபின்னமாக்கப்படுவதைச் சம்பந்தப்பட்ட தரப்பு, தட்டிக் கேட்க வேண்டும். சம்பந்தப்பட்ட தரப்பு தொடர்ந்தும் மௌனம் சாதித்து வந்தால் பாதிக்கப்படப்போவது யாழ். குடாநாட்டு மக்களே என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும்

படையினர் தட்டிக் கேட்க யாருமில்லை என்ற எண்ணத்தில் கண்டல் காடுகள்மீது தொடர்ந்தும் தமது கைவரிசையைக் காட்டிவருகின்றனர்.

எனவே, யாழ். குடாநாட்டு சுற்றுப்புறச் சூழல் முழுமையாகப் பாதிக்கப்பட முன்னர், இந்தச் செயலைத் தடுத்து நிறுத்துவதன் மூலம் 'பாரிய' சூழல் பாதிப்பில் இருந்து யாழ். குடாநாட்டைக் காப்பாற்ற முடியும். ☆

## ஒரு நிமிடம் சிந்திப்போம்

பாராட்டும் மனப்பாங்கை நாம் எல்லோரும் வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். ஏனெனில், ஒருவரின் வளர்ச்சி நிலை மற்றவர்களின் பாராட்டினால் உருவாகின்றது.

அநேக பெற்றோர் - ஆசிரியர்கள் பிள்ளைகளை எடுத்ததற்கெல்லாம் குறைகூறுவதையே தம் தொழிலாக கொண்டிருக்கின்றார்கள்.

குறை சொல்வதனால் பிள்ளைகளை திருத்திக்கொள்ளமுடியும் என்பது வழிகாட்டிகளின் மனப்பான்மை. ஆனால், தாம் வெளிப்படுத்துகின்ற குறைவார்த்தைகள் ஒருவரை எவ்வளவாகப் பாதிக்கின்றது என்பதை அவர்கள் உணரமறுக்கின்றார்கள்.

வழிகாட்டிகளிடம் இருக்கும் பெரிய குறைபாடு - பிள்ளைகளை ஒப்பிட்டு கதைகள் சொல்வது. மாட்டைப் போல, எருமை போல, கழுதைமாதிரி, அந்த கழுசறையோடு சேர்ந்துதான் இவனும் இப்படி மொக்குச் சாம்பிராணி, இல்லாததை ஒப்பிட்டுக்கூறும் குறைவார்த்தைகள் பிள்ளைகளின் மனதைப் பெரிதாகப் பாதிக்கின்றன.

ஒருவர் தன்மனதில் எதைத் தினம் உருவகித்துக் கொள்கின்றாரோ, அதுவாகவே அவர் மாற்றம் அடைகின்றார்.

பெற்றோர் பிள்ளைகளை தினம் எதைக்குறித்துப் பேசினாலும், அதுவாகவே பிள்ளைகள் மாற்றம் காணுகின்றார்கள்.

பேச்சுப் போட்டிக்கு ஒரு பிள்ளை பங்குபற்றி மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இதைக் கண்ட தந்தை கோபமாக - 'நீ முதலாம் இடத்தை பெறாமல் மூன்றாம் இடத்தை பெற்றது பெரிய திறமான செயல் என்று நினைக்காதே, உன்னை விட முதலாம் இடத்தைப் பெற்ற பிள்ளை கெட்டிக்காரி, நீ வெறும் மொக்கு' என்று கடுமையாக பேசினார்.

இவ்வாறான அநேக சந்தர்ப்பங்களில்- பிள்ளைகள் வழிகாட்டிகளினால், பாராட்டுப் பெறாமல் குறைகளைக் கேட்டு மனம் நொந்து போகின்றார்கள்.

ஒரு பிள்ளை போட்டியில் பங்குபற்றுகின்றதே பெரியகாரியம். அங்கு பரிசு கிடைப்பது என்பது முக்கியமல்ல, மாறாக பங்கு பற்றியதற்கே பெற்றோர் பாராட்ட வேண்டும். இது அவர்கள் கடமை. ஏனெனில், அப்போதுதான் அடுத்த போட்டியில் பங்குபற்ற ஆர்வம் ஏற்படும். இல்லாவிட்டால் போட்டிகளில் பங்குகொள்ள பிள்ளை அச்சம் கொள்ளும். தோல்வி பெற்றுவிட்டால் பெற்றோர் தொந்தரவு தாங்கமுடியாது என்ற உணர்வு தோன்றும். இது அடிமனதில் உறைந்து பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

இன்று பிள்ளைகள் - போட்டியிலும், பரீட்சைகளிலும் பங்கு கொண்டு வெற்றி பெறுவதிலும் பார்க்க - பெற்றோரின் அழுத்தத்திலிருந்து வெளியே வருவதே பெரும் சிரமமானதாக இருக்கின்றது.

பிள்ளைகளுக்கு அடிப்படையில் மகிழ்ச்சியை கொடுக்கும் களமாக வீடு அமையவேண்டும். மாறாக அழுத்தம் கொடுக்கும் இடமாக மாற்றம் பெற்றால், அது அவர்கள் வளர்ச்சிப் போக்கைத் தடுத்துவிடும்.

ஆகவே, பெற்றோர் - பிள்ளைகள் தவறிழைக்கும்போது பக்குவமாகத் திருத்தி அன்பு காட்ட வேண்டும். அளவுக்கதிகமாக எதிர்பார்ப்புக்களையும் பிள்ளைகளிடம் முன் வைக்காது அவர்களின் சிறிய நல்லமுயற்சிகளைப் பாராட்டி வாழ்த்த வேண்டும். சிந்திப்போம் செயற்படுவோம்.

- யாழ். ராதவல்லி

# கெயிட்டியின் இரண்டாவது நகரமும் போராளிக்குழுக்கள் வசம் வீழ்ந்தது





கெயிட்டியின் இரண்டாவது நகரான கப் கெயிட்டினை போராளிக் குழுக்கள் கைப்பற்றியுள்ளன. விரைவில் தலைநகரைக் கைப்பற்றி ஜனாதிபதி ஜீன் பேட்ராண்ட் அரிஷ்டைட்டைப் பதவியிலிருந்து வெளியேற்றவுள்ளதாகப் போராளிகள் தெரிவித்தனர். தலைநகரை அடைவதற்கு போராளிக் குழுக்கள் அரசபடையின் பலமான எதிப்பைச் சந்திக்க வேண்டி நேரிடலாமென பி.பி.சியின் ஸ்ரெப்பன் கிப்ஷ் தெரிவித்தார்.

இதனிடையே சர்வதேச நாடுகளினால் முன்வைக்கப்பட்டுள்ள அதிகாரக்குறைப்பிற்கு ஜனாதிபதி இணங்கியுள்ளதாகவும், போராளிகள் தலைநகரை அண்மித்துள்ளவேளையிலும் தலைநகர் அமைதியாக காணபபடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே கெயிட்டி தொடர்பான சர்வதேச நாடுகளின் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு போராளிககுழுக்கள் அழைக்கப்படவில்லை. போராளிக் குழுக்கள் எதிர்க்கட்சிகளுடனும் இதுவரை எந்தத் தொடர்புகளையும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை.

போராளிக் குழுத்தலைவரில் ஒருவரான கை பிலிப்பி வெளிநாட்டு செய்தியாளர் ஒருவருக்கு கருத்துத்தெரிவித்தபோது -

பதினைந்து நாட்களுக்குள் கெயிட்டி தமது கட்டுப்பாட்டிற்குள் வந்துவிடுமெனவும், ஜனாதிபதி 'ஜீன் பேட்ராண்ட் அரிஷ்டைப் பதவியிலிருந்து அகற்றப்பட்டுவிடுவாரெனவும் குறிப்பிட்டார்.

மற்றுமெரு போராளியான கிசல் புலுரி - பி.பி.சியின் உலகச் சேவைக்கு கருத்துத் தெரிவிக்கும்போது - தாம் தற்போது கைப்பற்றியுள்ள கப் கெயிட்டியின் மக்கள் - தமது போராளிகளை ஆதரவுடன் வரவேற்றுள்ளதாகவும், தற்போதைய ஜனாதிபதியை எவரும் விரும்பவில்லை எனவும் தெரிவித்தார். மேலும் 200 இற்கு மேற்பட்ட போராளிகள் விமான நிலையம் மற்றும் பொலிஸ் நிலையம் ஆகியவற்றை தம்வசபபடுத்திக் கொண்டதாகவும், 4 பொலிஸ் நிலையங்களில் இருந்த கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே சர்வதேச நாடுகளின் மத்தியஸ்தர்கள் எதிர்க்கட்சிகளை திங்கட்கிழமைக்குள் ஜனாதிபதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதிகாரப் பகிர்விற்கு இணக்கம் தெரிவிக்குமாறு கேட்டுள்ளனர்.

## ஈராக் நகரான கிர்குக்கில் தற்கொலைத் தாக்குதல்!



ஈராக்கின் நகரான கிர்குக்கில் தற்கொலைக்குண்டுதாரியினால் நிகழ்த்தப்பட்ட கார்க்குண்டு வெடிப்பில் அறுவர் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கார்க்குண்டுவெடிப்பு - பொலிஸ் நிலையமொன்றின்முன் நிகழ்த்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாண்டு ஆரம்பத்திலிருந்து பொலிஸாருக்கு எதிராக நடத்தப்பட்ட நான்காவது தற்கொலைத் தாக்குதல் இது எனவும், இதுவரை 300 பொலிஸ் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே அமெரிக்க இராஜாங்க அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் - ஈராக்குக்கு குண்டுவெடிப்பு நிகழ்ந்த பின்னர் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். சதாம் ஹுசைன் பதவியிலிருந்து விலக்கப்பட்ட பின் மேற்கொள்ளப்பட்ட இவரது நான்காவது விஜயமென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தனது விஜயத்தின்போது அமெரிக்காவின் ஈராக் நிர்வாக அதிகாரி போல் பிறீமருடன் கலந்துரையாடலையும் மேற்கொண்டார்.

இக்குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. ஆனால், குண்டுதாரி உட்பட அறுவர் கொல்லப்பட்டுள்ளதாக மீட்புப்பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் தெரிவித்தனர்.

## அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் மேலுமொருவர் போட்டியிட முடிவு!



அமெரிக்காவில் நுகர்வோரின் பாதுகாப்பிற்காக நீண்டகாலமாகப் போராடிவந்துள்ள ரல்ப் நாடெர் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளார். தேர்தலில் சுயேட்சையாக போட்டியிடப்போவதாகவும் அவர் அமெரிக்க வானொலிக்குத் தெரிவித்திருந்தார்.

2000 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தேர்தலில் கிரீன் டாட்டியின் வேட்பாளராகப் போட்டியிட்டு ஜனாதிபதியால் தேர்தெடுக்கப்பட்டவரை விட மூன்றுவீத வாக்குகள் குறைவாகப் பெற்றிருந்தார்.

தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்வந்தமைக்கான காரணத்ததைத் தெரிவிக்கும்போது- அமெரிக்காவில் அதிகாரமும், செல்வமும், மிகவும் குறைவான எண்ணிக்கையான தொகையினரிடமே காணப்படுவதாகவும், இருகட்சிகள் தொடர்ந்து போட்டியிடுவதால் தான் சுயேட்சையாகப் போட்டியிட முன்வந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

70 வயதான நாடெர் தேர்தலில் போட்டியிடுவதை பெருமளவான அமெரிக்க மக்கள் விரும்பவில்லை. இதனால் இவரது நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பிற்கு அளித்துவந்த நன்கொடையையும் அவர்கள் நிறுத்தியுள்ளனர்.

## இஸ்ரேல் மேற்குக்கரையில் அமைத்த தடுப்புச்சுவர் குறித்த விசாரணைகள் சர்வதேச நீதிமன்றில் நேற்று ஆரம்பம்!

மேற்குக்கரைப்பிரதேசத்தில் இஸ்ரேலிய அரசினால் அமைக்கப்பட்டுள்ள தடுப்புச்சுவர் சட்டரீதியானதா என்பதை அறிவதற்கு கேக்கில் அமைந்துள்ள சர்வதேச நீதிமன்றத்தில் நேற்று விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்தவர்கள் இது தொடர்பான விசாரணை நடத்துமாறு சர்வதேச நீதிமன்றத்திடம் கோரியிருந்தனர்.

பலஸ்தீன பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றப்பத்திரிகை முதல் மூன்று மணித்தியாலங்கள் ஆராயப்படவுள்ளது.

பலஸ்தீனர்களுக்குச் சொந்தமான நிலத்தை ஆக்கிரமித்துக்கொள்வதற்காகவே தடுப்புச்சுவர் கட்டப்பட்டுள்ளதாகவும், சில பிரதேசங்களில் இஸ்ரேலியக் குடியிருப்புக்களை சுற்றியே பாதுகாப்புச்சுவர் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் பல ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்களின் வாழ்கை அவலத்துக்குள்ளாகியுள்ளதாகவும் பத்திரிகை நிருபர் ஒருவர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

பலஸ்தீனத்துக்கான ஐக்கிய நாடுகளின் நிரந்தர அவதானிப்பாளரான நாஸர் அல் கிட்வா இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போது -

சர்வதேச சட்டங்களுக்கு முரணாக தடுப்புச்சுவரை இஸ்ரேலியர்கள் அமைத்துள்ளதாகவும், தமது சொந்த நிலப்பரப்பினுள் சுவரை அமைத்திருந்தால் - பலஸ்தீனர்களின் நிலத்தை ஆக்கிரமித்துள்ளனர் என்ற குற்றச்சாட்டு எழுந்திருக்காது எனவும் குறிப்பிட்டார்.

ஆனால், தடுப்புச்சுவர் இஸ்ரேலிய மக்களைக் காப்பாற்றுவதற்கான இறுதி முயற்சி எனவும், இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்பவர்களுக்கெதிராக அவற்றை தடுப்பதற்கு பலஸ்தீன அதிகாரிகள் எதுவித முயற்சியையும் மேற்கொள்ளவில்லை எனவும் இஸ்ரேலின் வெளிநாட்டு அமைச்சின் பேச்சாளர் பி.பி.சிக்கு தெரிவித்தார்.

இதனிடையே சர்வதேச நீதிமன்றம் அமைந்துள்ள கேக்கில் ஆயிரக்கணக்கான மக்கள் தடுப்புச்சுவரை அகற்றக்கோரி ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டுள்ளனர்.

பலஸ்தீன தலைவர் யசீர் அரபாத் தொலைக்காட்சிக்கு தெரிவித்த செய்தியில் தடுபபுச்சுவர் தொடர்பான மக்களின் குரல் முழு இடத்திலும் கேட்கவேண்டும் என தெரிவித்திருக்கிறார்.

உலக நோக்கு

## ஒரிஸா தேர்தலின்போது காதலர் கட்சியும் போட்டி!

ஒரிஸா மாநிலத்தில் கடந்த 14 ஆம் திகதி அம்பேத்கார் பிறந்ததினத்தன்று 'காதலர் கட்சி' என்ற அரசியல் கட்சி தொடங்கப்பட்டது. 5 ரூபா கட்டி இந்தக் கட்சியில் உறுப்பினராகிவிடலாம்.

இந்தக்கட்சி ஒரிஸா மாநிலத்தில் உள்ள எல்லா நாடாளுமன்றத் தொகுதிகளிலும், வேடபாளர்களை நிறுத்தப்போவதாக அறிவித்துள்ளது. இதற்காக அந்தக்கட்சி காதலர்களுக்கு வலைவீசியுள்ளது.

காதல்திருமணம் செய்துகொண்டவர்கள் மட்டுமே வேட்பாளராக நிறுத்தப்படுவார்கள் என்று அந்தக்கட்சி அறிவித்துள்ளது. இந்தக் கட்சி நிறுவுனரான ராமச்சந்திரா என்பவர் புவனேஸ்வர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடுவதாக அறிவித்துள்ளார்.

காதலில் நம்பிக்கை உள்ளவர்கள் தனக்கு நிச்சயம் வாக்குப்போடுவார்கள் என்று அவர தெரிவித்தார். மற்ற மாநிலங்களில் காதலர்கள் போட்டியிடவிருப்பம்தெரிவித்தால் காதலர் கட்சி உதவி செய்யும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.



'பைரேட் அட் த கரிபீனஷ்' என்ற திரைப்படத்தில் நடித்ததன்மூலம் ஒஸ்கார் விருதைப்பெறவிருக்கும் ஜோனி டைப் திரைப்படத்தில் தோன்றும் காட்சி

## ஜப்பானின் இரண்டு ஹெலிகள் நடுவானில் மோதி நொருங்கின

### இருவர் கொல்லப்பட்டனர்



ஜப்பானின் மத்திய பகுதியில் அமைந்த நகரான ரோபாவில் நடுவானில் இரு இராணுவ ஹெலிகொப்டர்கள் மோதிக்கொண்டதில் இருவர் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்கள் சம்பவம் நடந்த வேளையில் இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். இரண்டாவது ஹெலிகொப்டரில் பயணஞ்செய்த பயிற்சியாளரும், விமான ஓட்டியும் சிதைந்த ஹெலிகொப்டரிலிருந்து சுயநினைவற்ற நிலையில் மீட்கப்பட்டனர்.

இந்த விபத்துக்கான காரணத்தை அறிவதற்கு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பிரதான கட்சிகள் இரண்டும் 12 மாவட்டங்களில் வேட்புமனு

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணியும் 12 மாவட்டங்களில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை நேற்றுத் தாக்கல் செய்தன.

கொழும்பு, காலி, மாத்தறை, புத்தளம், கம்பஹா, இரத்தினபுரி, பதுளை, மாத்தளை, அம்பாந்தோட்டை, அனுராதபுரம், கண்டி, வவுனியா, ஆகிய மாவட்டங்களிலேயே இரு கட்சிகளும் போட்டியிட வேட்புமனுவைத் தாக்கல் செய்தன.

கம்பஹா மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கருஜெயசூரிய தலைமையிலும், ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் அனுரா பண்டாரநாயக்கவும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர்.

தேசிய ஹெல உறுமய கட்சியின் சார்பில் சுமந்திர தேரர் தலைமையிலும் தாக்கல் செய்யப்பட்டது.

கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி செயலாளர் சுசில் பிரேமஜயந்த தலைமையிலும், புத்தளம் மாவட்டத்துக்கான ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் வேட்புமனு - நிபாமல் பெரேரா தலைமையிலும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மிரால் பெர்ணாண்டோ தலைமையிலும் தாக்கல் செய்யப்பட்டது.

மாத்தளை மாவட்டத்தின் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அமைச்சர் அலிக் அலுவிகார தலைமையிலும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் ஜெனக பண்டார தென்னக்கோன் தலைமையிலும், மாத்தறை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அமைச்சர் மகிந்த விஜயசேகர தலைமையிலும் தாக்கல் செய்யப்பட்டது.

இரத்தினபுரி மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் சுசந்த புஞ்சி நிலமே ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் டபிள்யு.ஜே.செனவிரட்ன தலைமையிலும் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஆனந்தகுமார ரட்ணவும், ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் மகிந்த ராஜபக்ஷவும் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

## உள்ளூர் மீனவர்கள் மீது

## இந்திய மீனவர்கள் நடத்திய தாக்குதலில் இருவர் படுகாயம், ஒருவரைக் காணவில்லை

பருத்தித்துறைக் கடற்பரப்பில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்த மூன்று மீனவர்கள் மீது இந்திய மீனவர்கள் தாக்குதல் நடத்தியதில் இருவர் படுகாயமடைந்ததுடன், ஒருவரைக் காணவில்லை. இவர்களுடைய மீன்பிடிப் படகுகள் அடித்து நொருக்கப்பட்டடுள்ளது.

நேற்றுக்காலை 10 மணியவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் வியாபாரி மூலை, முதலாம் கட்டையைச் சேர்ந்த செல்லத்துரை செல்வராசா (வயது 40) இவரது மகன் செல்வராசா செல்வமோகன் (வயது 15) ஆகிய இருவரும் வாள் வெட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களுடன் வாள்வெட்டுக்கு இலக்கான கனகரத்தினம் சிவானந்தன் (வயது 31) என்பவரைக் காணவில்லை என தெரிவிக்கப்படுகிறது.(202,121)

## அமெரிக்க ராஜீய அதிகாரி இந்த வாரம் வருகிறார்!

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் இந்த வாரம் கொழும்புக்கு வருகை தரவுள்ளார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் அமைந்துள்ள தெற்காசிய விவாகரங்களுக்குப் பொறுப்பான பிரிவின் பணிப்பாளரான ஜோன் கிளஸ்ஸே இந்த வாரம் இலங்கைக்கு வரவுள்ளதாக அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் அவர் அரச அதிகாரிகள், அரசியற் தலைவர்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் அறிஞர்களையும் சந்திப்பார் என அமெரிக்கத் தூதரகம் தெரிவித்தது.

## ஆறு அரசியல் கட்சிகள் வன்னியில் வேட்புமனு!

எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத தேர்தலில் வன்னிமாவட்டத்தில் போட்டியிடுவதற்கு நேற்றைய தினம் வவுனியா அரச செயலகத்தில் ஆறு அரசியற் கட்சிகளும், இரண்டு சுயேட்சைக் குழுக்களும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தன.

இதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி கூட்டான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, புதிய இடது சாரி முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணி (புளொட்) தேசிய சோசலிசக் கட்சி, ஜாதிக ஹெல உறுமய, மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆகிய கட்சிகளும் இரண்டு சுயேட்சைக் குழுக்களும் அடங்குகின்றன. (03)

### தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் 40 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தல் தொடர்பாக, நேற்று மாலை வரை 40 வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று மட்டும் 11 வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன. ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஆகிய இரண்டும் தலா 3 முறைப்பாடுகளும் அநுராதபுரம் மாவட்டத்தில் ஆறு வன்முறைச் சம்பவங்களும்இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)

### தபால் வாக்காளர் விண்ணப்பத் திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தபால் மூலம் வாகளிப்பதற்கான விண்ணப்பத் திகதி நீடிகப்பட்டிருப்பதாக தேர்தல ஆணையாளர் அறிவிததுள்ளார்.

தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்ப திகதி இன்றுடன் முடிவடைய இருந்தபோதிலும், அடுத்த மாதம் 3 ஆம் திகதி வரை விண்ணப்ப திகதி நீடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளுடன் பேசுவதன் மூலமே தமிழருக்கு நல்ல தீர்வு கிடைக்கும்

### புளொட் தலைவர் சித்தார்த்தன் கூறுகிறார்

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்க நாங்கள் தயாரில்லை என்று வவுனியாவில் வேட்புமனுவைத் தாக்கல் செய்த பின், புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

பி.பி.சிக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நாங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளை பொறுத்த வரையில் பேச்சுவார்த்தை விடயத்தில் அவர்களை முற்றுமுழுதாக ஆதரிக்கிறோம். அந்த நிலைப்பாட்டை தொடர்ந்து எடுத்து வருகிறோம்.

ஏனெனில், தமிழீழ விடுதலைப் புலிகள்தான், வடக்கு - கிழக்கில் ஒரு பலம் வாய்ந்த சக்தியாக இருக்கின்றார்கள். அவர்களுடன் பேசுவதன் மூலம்தான் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு முழுத் தீர்வு கிடைக்கும் என்பதை நாங்கள் நம்புகிறோம்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் இணைவது சம்பந்தமாக எங்களிடம் பேசுகிறார்கள். இருந்தபோதிலும், இறுதியில் அவர்களிடமிருந்து எந்த விதபதிலும்வரவில்லை. இதனால்தான், எமது அமைப்பின் சார்பில் வவுனியாவிலும், கிழக்கு மாகாணத்திலும் தனியாகப் போட்டியிடுகிறோம் என்றார்.

### ஆட்சியைக் கைப்பற்றினால்

## அரசியலமைப்பு மன்றமாக நாடாளுமன்றம் பிரகடனமாம்

### ஜனாதிபதி சந்திரிகா திட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைத்ததும், புதிய அரசியலமைப்பை அமைப்பதற்கான அரசியலமைப்பு சபையாக நாடாளுமன்றத்தைப் பிரகடனம் செய்ய ஜனாதிபதி சந்திரிகா திட்டமிட்டிருப்பதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த அரசியலமைப்பு மன்றம் மூலம் புதிய அரசியலமைப்பு சபை உருவாகும் என்றும், இந்த அரசியலமைப்பின் மூலம் தற்போதுள்ள ஜனாதிபதி பதவி ஒழிக்கப்பட்டு அனைத்து அதிகாரங்களும் நாடாளுமன்றத்திற்குக் கையளிக்கப்படும்.

மகரகமவில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புதிய அரசியலமைப்பை உருவாக்கப்போவதாகத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ்த் தேசிய...

தார். இந்த வேட்பாளர் பட்டியலில் யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான அப்பாத்துரை விநாயகமூர்த்தி, சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோா, ஜோன் பேர்ருட் கிறிஸ்தோபர், முகமட் அப்துல் சகானி, சதாசிவம் கனகரத்தினம், ஜோசப் மரியநாயகம் சூசை, சு.லோகநாதலிங்கம் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தலைமையிலான குழுவினர், மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

இந்தப்பட்டியலில் ஜோசப் பரராஜசிங்கம், ராஜன் சத்தியமூர்த்தி, ரி.கனகசபை, கிங்ஸ்லி இராசநாயகம், எஸ்.ஜெயாநந்தமூர்த்தி, பி.அரியநேந்திரன், தங்கேஸ்வரி கதிர்காமன், அரியரத்தினம் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் தலைமையிலான குழுவினர் திருகோணமலை மாவட்டத்துக்கான வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர். இந்தப் பட்டியலில் ஆர்.சம்பந்தன், கே.துரைரத்தினசிங்கம், முகுந்தன், சண்முகநாதன், அப்துல் அசாம் சாகுல் ஹமீட், விக்னேஸ்வரன், ரகுநாதன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்துக்கான வேட்புமனுவை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு தாக்கல் செய்தார்.

இந்தப்பட்டியலில் அரியநாயகம் சந்திரநேரு, கல்யாணசுந்தரம், தம்பிநாதன் தினகரப்பிள்ளை, இரா. சிவகுமார் சீனித்தம்பி சுந்தரலிங்கம், சபாபதி யோகாம்பிகை , கனகசபை பத்மநாதன், சாமித்தம்பி விவேகானந்தன், எஸ்.சிறிஸ்கந்தராசா, தோமஸ் தங்கதுரை வில்லியம் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

## தனது...

இந்தப் பிரச்சினைக்கு என்னால்தான் தீர்வு காணமுடியாது போனது என்ற நிலை இல்லை என்பதை உறுதியாகக் கூறுவதாகவும் சங்கரி குறிப்பிட்டார்.

## ஷெல்...

ததில் அவர் அந்த இடத்திலேயே மரணமானார். ம.பிரசன்னா (வயது 21), அ.யோன்சன் (வயது 26) ஆகியோர் காயமடைந்தனர்.

நேற்று பி.ப 1 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இறந்தவரின் சடலம் மரணவிசாரணைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (121)

## துயிலுமில்லத்தில்...

மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து யாழ். செயலகத்தில் தமது வேட்பாளர் பட்டியலைச் சமர்ப்பித்தனர்.

வேட்புமனுவை தாக்கல் செய்த பின், யாழ். செயலக வாசலை அடைந்த கூட்டமைப்பின் வேட்பாளர்களை பொதுமக்கள் குழுமி நின்று வரவேற்றதுடன் கரகோஷமும் செய்தனர்.

தொடர்ந்து அந்த மக்களின் மகிழ்ச்சி ஆரவாரத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்களும் கலந்துகொண்டு கரகோஷமும் செய்து மகிழ்ச்சி வெளியிட்டனர்.

தொடர்ந்து நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) அலுவலகத்தில் ஊடகவியலாள்ர் சந்திப்பொன்றையும் கூட்டமைப்பு வேட்பாளர்கள் நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (ப,தீ)

## தேர்தலில் பௌத்த...

வீட்டுக்கு முன்பாகக் கூடிய பௌத்த பிக்குகள் தேர்தலில் போட்டியிட வேண்டாம் என்று கோஷமிட்டவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொதுத்தேர்தலில் ஜாதிக ஹெல உறுமய என்ற பெயரில் போட்டியிடுவதால், பௌத்த மதத்துக்கு அவமானத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், இதனை சிஹல உறுமயவின் தலைவரே ஏற்பாடு செய்ததாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இதேவேளை, பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதற்கு சில அரசியற் கட்சிகளே காரணமென சிஹல உறுமயவின் தலைவர் திலக் கருணாரட்ண தெரிவித்தார்.

பௌத்த பிக்குகளை தமது வேட்பாளர் பட்டியலில் நிறுத்துவது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர்களுடன் பேச்சு நடத்த இரண்டு பௌத்த பீடாதிபதிகளும் அனுமதி மறுத்துள்ளனர்.

ஜாதிக ஹெல உறுமய தலைவர் வண. எல்லாவெல மேசானந்த தேரர், வண.கொட்டுபொல அமரகிட்டி தேரர், சுப்ரீம் கவுன்சில் பொதுச் செயலாளர் உடுவே தம்மலோக ஆகியோர் மல்வத்த மற்றும் சியாம் பீடாதிபதிகளை நேற்றுச் சந்திக்கத் திட்டமிட்டிருந்தனர்.

ஆனால், ஜாதிக ஹெல உறுமயவினர் தம்மைச் சந்திக்க விடுத்த அழைப்பினை இரண்டு பௌத்த பீடாதிபதிகளும் நிராகரித்தனர்.

இதேவேளை, பௌத்த பிக்குகள் தேர்தலில் போட்டியிடுவது தமது அரசியல் எதிர்காலத்துக்கு ஆபத்தானது என்பதால், ஜே.வி.பி சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணியாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## சமாதானமும்...

மக்களினாலும், சிங்கள தேசத்தினதும், தமிழ்மக்களின் உண்மையான ஏகபிரதிநிதிகள் என்பதை ஏற்றுக்கொண்டு தமிழ்மக்கள் அதற்கான ஆதரவை மீண்டும் வற்புறுத்தி வழங்க வேண்டும். எமது இலக்கை நாம் இதுவரை அடையவில்லை.

எமது தமிழ்த்தேச மக்களின் விடுதலைக்கு எம்மை அர்ப்பணிக்க உறுதி பூண்டுள்ளோம் நாம் வீட்டுச்சின்னத்தில் போட்டியிடவுள்ளோம். இது பரிசீலனையில் ஏற்றுக் கொள்ளப்படும். எனவே, தமிழ்மக்கள் தாம் சிறப்பாக வாழ எமக்கு வாக்களிக்கவேண்டுமென உரையாற்றினார்.

## சுயேட்சைக் குழுவாக...

கல் செய்துள்ளன.

புதிய இடதுசாரி முன்னணி - அப்பாத்துரை குமாரசாமி தலைமையில் - சுந்தரம் மகேந்திரன், நாகராஜா விஜயன், ஆறுமுகம் கந்தசாமி, வேலுப்பிள்ளை கமலராஜன், வல்லிபுரம் கந்தையா, சின்னத்துரை விமலன், நாகரத்தினம் பொன்னையா, காசிலிங்கம் பத்மராஜ், கந்தவனம் தயாளன், கணபதி தில்லைநாதன், வேதநாயகம் அரசரட்ணம் ஆகியோரும் போட்டியிடவுள்ளனர்.

சுவராஜ்ய கட்சியின் சார்பில் ரட்ணசிங்கம் குணசேன தலைமையில் - தர்மசிங்க காசிநாதன், சபாரட்ணம் கமலாதேவி, அப்பாத்துரை முருகையா, கனகசிங்கம் கோவர்த்தனன், அழகரட்ணம் புஸ்பகுமாரி, அழகராஜா யசோதா, அழகராஜா ஜசோதினி, பரமசிவம் லச்சுமணன், விஸ்வ காந்தன் யசோதா, புலேந்திரன் சிவகௌரி ஆகியோரும் போட்டியிடவுள்ளனர்.

ஐக்கிய சோசலிசக் கட்சியின் சார்பில் எஸ்.நகுலராஜா தலைமையில் - தேவசகாயம் அன்ரனி, தவபாலசிங்கம் சுரேந்திரகுமார், அருணந்தி குகதாஸ், எ.ஜெயராணி, எஸ்.மகாடும், எ.ஜே.ராஜ்குமாரி, கோவிந்தராஜா, இராமநாதன், வி.கந்தையா, ஆர்.சபாரட்ணம், எஸ்.கே. பாலசுப்பிரமணியம் ஆகியோரும் போட்டியிடவுள்ளனர்.

சுயேட்சையாக ஆனந்தசங்கரி தலைமையில் - சண்முகம் முத்துலிங்கம், அரவிந்தன் சண்முகராஜா, செல்வம் பத்மநாதன், அந்திரேசு வஸ்தியாம்பிள்ளை ஜோர்ச், குசலநந்தன் இராஜரட்ணம், கிருஷ்ணராஜா நடராசா, பெரியபொடி சூரியமூர்த்தி, காந்தரூபன் இளையதம்பி, சிவகுமார் பொன்னுத்துரை, இராமசாமி சங்கையா, செல்லன் கந்தையன் ஆகியோரும் போட்டியிடவுள்ளார்கள். (தீ,ப)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.